விலை: 60.00
பக்கங்கள் : 12+12
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 133 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 18 ஞாயிற்றுக்கிழமை (01.05.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## பொருளாதார நெருக்கடியை தமிழர்கள் எவ்வாறு அணுகுவது?

### ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு யாழில் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை தமிழ் மக்கள் எவ்வாறு அணுகுவது என்பது தொடர்பாக ஒருங்கிணைந்த 11

பிரதமர் பதவி தொடர்பில்

## ஜனாதிபதியின் முடிவை ஏற்றுக்கொள்ளத் தயார்

### மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதமர் பதவி தொடர்பில் ஜனாதிபதி எடுக்கும் எந்த முடிவையும் ஏற்றுக்கொள்ளத் தயார் என பிரதமர் மகிந்த ராஜபக்ச ஆங்கில ஊடகத்துக்கு தெரிவித்துள்ளார்.

எனக்குப்பதில் வேறொருவரை பிரதமராக நியமிப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்தால் நான் அதனை ஏற்கத் தயார் என்பதோடு ஜனாதிபதி எடுக்கும் தீர்மானங்களை மதிக்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். 11

மகாசங்கத்தினர் எந்த நிலைப்பாட்டை எடுத்தாலும்

# பதவியிலிருந்து விலகேன்

# இடைக்கால அரசு தீர்வு அல்ல

### பிரதமர் மகிந்த திட்டவட்டமாக அறிவிப்பு



(கொழும்பு)

"நாட்டின் தற்போதைய நெருக்கடிக்கு இடைக்கால அரசு தீர்வு அல்ல, மகாசங்கத்தினர் எந்த நிலைப்பாட்டை எடுத்தாலும் பிரதமர் பதவியிலிருந்து விலகமாட்டேன்" என மகிந்த திட்டவட்டமாக அறிவித்ததாக முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

(11 ஆம் பக்கம் பார்க்க)

## விலை மாற்றம்

***அன்பு வாசகர்களே!***

காகிதாதிகள் மற்றும் எரிபொருள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களினதும் விலைகள் பன்மடங்கு அதிகரித்திருப்பதன் காரணமாக 01.05.2022 இன்றில் இருந்து உங்கள் **வலம்புரி** நாளிதழின் விலை 50/= ரூபாயாகவும் **சங்குநாதத்தின்** விலை (ஞாயிறு வாரமலர்) 60/= ரூபாயாகவும் நிர்ணயிக்கப்படுகின்றது.

எமக்கு அப்பாற்பட்ட நிலைமை காரணமாக ஏற்பட்டுள்ள இவ்விலை அதிகரிப்பை ஏற்று, வழமைபோல் உங்கள் ஆதரவை வழங்குமாறு அன்புரிமையுடன்வேண்டி நிற்கின்றோம்.

நிர்வாகம்
**வலம்புரி**

காலிமுகத்திடலில் நடைபெறும் அரசுக்கு எதிரான போராட்டம்



## யாழ். பல்கலையில் மூவர் பேராசிரியர்களாகப் பதவி உயர்வு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மூவர் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

மருத்துவ பீடத்தைச் சேர்ந்த ஒருவரும், வணிக முகாமைத்துவ பீடத்தைச் 11

3 ஆம் திகதி

## விழிப்புடன் இருக்கவும்

### அனுரகுமார

"சம்பந்தப்பட்டவர்களும் கோரியவர்களும் 11

## இறுதிப் போருக்குத் தயார்

### தொழிற்சங்கங்கள் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் மே 6ஆம் திகதிக்குள் அரச தலைவரோ அல்லது பிரதமரோ பதவி விலகுவது தொடர்பில் இறுதித் தீர்மானத்தை எடுக்காவிட்டால் நாட்டின் நிலைமை படுமோசமாகிவிடும் என்றும் அனைத்து தொழிற்சங்கங்களும் இறுதிப் போருக்குத் தயார் 11

## மகிந்த பதவி விலகாவிட்டால்

### அரசியல்வாதிகள் நிராகரிக்கப்படுவார்கள்

### மகாசங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

பிரதமர் பதவியிலிருந்து மகிந்த ராஜபக்ச விலகாவிட்டால் மகாசங்க பிரகடனத்தின்கீழ் அனைத்து அரசியல்வாதிகளும் நிராகரிக்கப்படுவார்கள் என மகாசங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சுதந்திர சதுக்கத் 11

## அரசுக்கு எதிரான தீர்மானம் அடுத்த வாரம் சபையில்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்


(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை அடுத்த வாரம் பாராளுமன்றத்திற்கு கொண்டுவரவுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு கடற்பரப்பில் காற்றின் வேகம் அதிகரிக்கும்

## கடற்றொழிலாளர்களுக்கு எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்)

வடக்கு மற்றும் கிழக்கு கடற்பரப்பில் காற்றின் வேகம் மணித்தியாலத்துக்கு 40 - 60 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக் கூடும் என்பதால், மீன்பிடி மற்றும் கடற்றொழில்களில் ஈடுபடுபவர்கள் அவதானத்துடன் செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் காங்கேசன்துறையிலிருந்து புத்தளம், கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட ஆழமுள்ள மற்றும் ஆழம் குறைந்த கடற்பரப்புக்களில் காற்றின் வேகம் அதிகரிக்கக்கூடும்.

காலியில் இருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்பில் ஆழமான மற்றும் ஆழம் குறைந்த கடற்பரப்பில் கடற்றொழிலாளர்கள் அவதானத்துடன் செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (ம-7)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் மே தினப் பொதுக்கூட்டமானது இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்றத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் சமூக செயற்பாட்டாளர் ம.செல்வின் இரனியேஸ், மனித உரிமைச் செயற்பாட்டாளர் றுக்கி பெர்னாண்டோ, அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் ஆகியோர் கருத்துரையாற்றவுள்ளனர். (ம-7)

# தெல்லிப்பழையில் ஹயஸ் விபத்து



(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காங்கேசன்துறை வீதியில் பயணித்த ஹயஸ் வாகனம் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் உள்ள மதகுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து நேற்றைய தினம் பிற்பகல் வேளையில் இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் வாகனத்தில் பயணித்த எவருக்கும் தெய்வாதீனமாக காயங்கள் எவையும் ஏற்படவில்லை. தெல்லிப்பழை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

# பெற்றோலிய தனியார் தாங்கி உரிமையாளர்கள் போராட்டம்

(கொழும்பு)


கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமையினால் இலங்கை பெற்றோலிய தனியார் தாங்கி உரிமையாளர்கள் சங்கம் நள்ளிரவு முதல் சேவையிலிருந்து விலக தீர்மானித்துள்ளது.

தமது கொடுப்பனவுகளை அதிகரிக்குமாறு கோரி இந்த நடவடிக்கையை மேற்கொள்வதாக சங்கத்தின் இணைச் செயலாளர் சாந்த சில்வா தெரிவித்தார்.

எங்கள் போக்குவரத்துக் கட்டணங்களுக்கான விலைச்சூத்திரம் எங்களிடம் உள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப்புடன் அதனை புதுப்பிக்குமாறு கோரிக்கை விடுத்தோம். அதற்கு சாதகமான பதில் கிடைக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (ம-7)


## இதய அஞ்சலி



எமது பல்கலைக்கழக நண்பி திருமதி **லதாரஞ்சினி ஜீவதாசன்** (ஆசிரியர் - கிளி/அக்கராயன் மகா வித்தியாலயம்) அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் கதிர்காமு இராசையா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மண்ணில் 15.04.1940 விண்ணில் 29.04.2022

பிரிவுத் துயரில் பங்குகொள்ளும்:
யாழ்.பல்கலைக்கழக 1995/96 கல்வியாண்டு நண்பர்கள்

(C-4269)



## A/L Physics & Chemistry

Personal & Group Classes

- தவறவிட்ட பாடம் அனைத்தும் முழுமையாக கற்கும் வாய்ப்பு.
- கடந்த கால வினாத்தாள் உட்பட குறுகிய காலத்தில் கற்பிக்கப்படும்.

(11241)

Con - 076 322 0916



## விற்பனைக்கு

ஊரெழு பலாலி வீதிக்கு மிக அருகாமையில் அமைதியான குடியிருப்புப் பகுதியில் வீடு, காணித்துண்டுகள் விற்பனைக்கு உண்டு.

(11205)

077 738 4178


## மரண அறிவித்தல்

### கந்தையா புஸ்பராஜா (வவா)



யாழ்ப்பாணம் நல்லூரடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா புஸ்பராஜா (வவா) அவர்கள் நேற்று (30.04.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - மகேஸ்வரியின் அன்புப் புதல்வனும் ஹேமலதாவின் அன்புக் கணவரும் மயூரதி, டிலக்ஷன், நிரோஷன், தனுராஜ், ஞானதேசிகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரஜீவன், ஆஷா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் விஸ்வந், தன்ஷிகா ஆகியோரின் செல்லப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01.05.2022) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.120, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

(11239)

தகவல்:
குடும்பத்தினர்
077 963 1386


## துயர் பகிர்கின்றோம்



பிறப்பு 1971.11.09

இறப்பு 2022.04.30

எமது நிறுவனத்தின் முகாமையாளர்

**அமரர் தர்மராசா சத்தியதவராசா**

கண்ணியம், நேர்மையோடு
கடமையைச் செய்து நின்றாய்
திண்ணிய நெஞ்சம் கொண்டவனே!
எம்மைவிட்டு
விண்ணகம் சென்றதேனோ?
விதியினை என்ன செய்வோம்

சொல்லாலும் செயலாலும்
தூய்மையுடன் பணியாற்றி
எல்லோர் மனங்களிலும்
இடம்பிடித்த நாயகனே
சொல்லாமற் சென்றதென்ன?
சொர்க்கந்தான் அழைத்ததுவோ?

(11238)

அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


துயருடன்:-
லிங்கன் கிறீம் ஹவுஸ்
உரிமையாளர், ஊழியர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் போராட்டம்

(கொழும்பு)

**அரசாங்கத்தினை பதவி விலகக் கோரி காலி முகத்திடலில் இளைஞர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட அமைதிப் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது.**





கடந்த ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி முதல் இரவு பகல் பாராமல் பாரியளவி லான மக்கள் கலந்து கொண்டு போராட்டம் தொட ர்வது குறிப்பிடத்தக்கது. (நி-6)

# மருந்து பொருட்களின் விலைகளும் அதிகரிப்பு

(கொழும்பு)

மருந்துப் பொருட்களின் விலைகள் 40 வீதத்தி னால் அதிகரித்து வர்த்த மானியொன்று வெளியி டப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சர் ஜய சுமனவி னால் இந்த விலை அதிகரி ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்மூலம் 60 மரு ந்துகளின் விலைகள் அதி கரிக்கப்பட்டுள்ளதாக அறி விக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பரசிட்ட மோல், அட்டோ வாஸ்ட டின், எனலா பிரில், அஸ்பி ரின் உள்ளிட்ட பல்வேறு மருந்துப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள் ளன. (நி-6)

# இடைக்கால அரசில் மோசடியாளர்கள் உள்வாங்கப்பட்டால் எதிர்ப்போம்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கடிதம்

(கொழும்பு)

கடந்த காலங்களில் ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளான நபர்களுடன் எதிர் காலத்தில் இடைக்கால அர சாங்கம் உருவாக்கப்பட் டால் அதற்கு தாம் எதிர்ப்பு வெளியிடுவோம் என அரச மருத்துவ அதிகாரிகள் சங் கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொட ர்பாக பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அனை த்துப் பாராளுமன்ற உறுப்பி னர்களுக்கும் பகிரங்கக் கடிதம் ஒன்றை கையளித் துள்ளதாக அச்சங்கத்தின் உறுப்பினர் மருத்துவர் சமில் விஜேசிங்க தெரிவித் தார்.

சர்வகட்சி அல்லது இடை க்கால அரசாங்கத்தை அமைக்கும்போது அரசாங் கம், பொதுமக்கள் மற்றும் நாட்டின் ஸ்திரத்தன்மையை நினைவில் கொள்ள வேண் டும் என்றும் அவர் வலியுறு த்தினார்.

அந்தவகையில் நாடளா விய ரீதியில் போராட்டம் நட த்தும் பொதுமக்களின் வேண் டுகோளுக்கு இணங்கவும் பொருளாதாரத்தை ஸ்திர ப்படுத்தவும் தூய்மையான அரசியலை மேற்கொள்ள வேண்டும் என அரச மருத் துவ அதிகாரிகள் சங்கம் கேட் டுக்கொண்டுள்ளது. (நி-6)

# அதிகாரத்தை வழங்கியவர்களுக்கு அதை மீளப் பெறும் உரிமையும் இருக்கிறது

## முன்னாள் தேர்தல் ஆணையாளர்



(கொழும்பு)

அதிகாரத்தை வழ ங்கிய மக்களுக்கு அதனை மீளப்பெறும் உரிமை இருக்கிறது. எனினும் அந்த உரிமை அரசியலமைப்பில் உள் வாங்கப்படுமாயின் மக்க ளால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளை அவர்க ளாலேயே பதவி யிலிருந்து நீக்கும் அதி காரம் உத்தியோகபூர் வமாகக் கிடைக்கப் பெறும் என்று முன்னாள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

19 இற்கும் அப்பாற் சென்று அதனை விட வும் ஜனநாயக ரீதியான திருத்தம் கொண்டு வர ப்பட வேண்டும் என் பதே எனது நிலைப்பாடா கும்.

எவ்வாறிருப்பினும் 19 பிளஸ் என்பது அவசியம் ஆனால் அது வும் போதுமானதல்ல என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (நி-6)

### தாய்லாந்தில் இருந்து எரிவாயு கொள்வனவு

(கொழும்பு)

தாய்லாந்தில் இருந்து எரிவாயுவை கொள்வ னவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்து ள்ளது.

புதிய ஒப்பந்தத்தின் கீழ் ஒரு மெட்ரிக் தொன் எரி வாயு 95 டொலர் எனவும் தாய்லாந்தில் இருந்து வருடத்திற்கு 300,000 மெட்ரிக் தொன் எரிவா யுவை வாங்குவதாக அந் நிறுவனம் தெரிவித்து ள்ளது.

முன்னர் ஓமானில் இருந்து கொள்வனவு செய் யப்பட்ட ஒரு மெட்ரிக் தொன் எரிவாயுவிற்கு 105 டொலர் செலவானது என்றும் அந்த நிறு வனம் சுட்டிக்காட்டியுள் ளது.

அதன்படி, தாய்லாந் தில் இருந்து எரிவா யுவை கொள்வனவு செய்வதன் மூலம் மெட் ரிக் தொன் ஒன்றுக்கு 10 டொலர் என செலவை குறைக்க முடிந்துள்ளது எனவும் அதன்படி தாய் லாந்தில் முன்பதிவு செய் யப்பட்ட எரிவாயுவின் முதல் தொகுதி அடு த்த மாதம் இலங்கை க்கு வழங்கப்படும் எனவும் லிட்ரோ நிறு வனம் தெரிவித்துள் ளது. (நி-6)


# மரண அறிவித்தல்

## திருமதி வெள்ளையம்மா சுந்தரம்பிள்ளை

## (மணியக்கா)



கோப்பாய் வடக்கு கோப்பா யைப் பிறப்பிடாகவும் வதிவிட மாகவும் கொண்ட தற்போது கனடாவில் வசித்து வந்த திருமதி. வெள்ளையம்மா சுந்தரம்பிள்ளை (மணியக்கா) கனடாவில் 26.04.2022 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாக்குட்டி அன்னபூரணம் அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற கனகரட்னம் ரங்கநாயகி அவர்களின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கனகரட்ணம் சுந்தரம்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் வேலாயுதம்பிள்ளை (கனடா) பத்மநாதன் (ஜேர்மனி) நவரட்ணம் (ஜேர்மனி) செல்வரட்ணம் (லண்டன்) கிருஷ்ணகுமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சந்திரகுமாரி, சுமதி, சாந்தரூபி, ஜயன்சி, தர்சினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சிந்துஜா, வசீகரன், வித்தியாகரன், மதனி, ஐஸ்வர்யா, கௌசல்யா, சரணியா, விதுசன், துவாரகன், ரசிகா, ரவிசாந், ரதீசன், கிருத்திகா, வர்சிகன், கீர்த்தனா, தர்சிகன், தேசிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கிறிஸ், இனியா, மாயா, பிரீத்திகா, சயனிகா, விக்னேஸ், அமிஷா, விஷ்னு ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 02.05.2022 திங்கட்கிழமை 10.30 மணியளவில் கனடா டொரண்டோவில் இடம்பெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
திரு.சு.கிருஷ்ணகுமார் (மகன்)
(குமார்)
கனடா

(11230)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விக்ரம்- ராஜன் - கங்கு வெற்றிக் கிண்ணம்-2022
## கே.சி.சி.சி. அணி இறுதிப் போட்டிக்கு தெரிவு

விக்ரம்-ராஜன்-கங்கு வெற்றிக்கிண்ணம் தொடரின் Play Off சுற்றில் (QUALIFYERI) தகுதி சுற்றுப்போட்டி பிரிவு I இன் முதலாவது அணிக்கும் பிரிவு II இன் முதலாவது அணிக்கும் கடந்த 23 ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடை பெற்றது.

இப்போட்டியில் கே.சி.சி.சி அணி, யாழ். பல்கலைக்கழக அணியை 128 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத்தகுதி பெற்றுள்ளனர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய கே.சி.சி.சி அணி 29.4 ஓவர்களில் 184 ஓட்டங்களைப் பெற்றனர். சத்யன்-33, ஜெயரூபன் -47, யனுதாஸ்-34, டினேஷ் -15, பிரதீஸ்-12 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் பல்கலைக்கழக அணி சார்பாக டேனுஜன் -04, தயுஸ்ரன், டிசநாயக்கா தலா-02, விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

185 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய யாழ்.பல்கலைக்கழக அணி இலக்காகக் கொண்டு களமிறங்கிய யாழ்.பல்கலைக்கழக அணி 16.1 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 56 ஓட்டங்களை பெற்றனர். I.R.பிரசாந்-17, ஓட்டங்களைப் பெற்றுக் களத்தடுப்பில் கே.சி.சி.சி அணி சார்பாக பிரதீஸ்-05, நிரூசிகன், சாம்பவன் தல -02, கரோனன்-01 விக்கெட்டினை கைப்பற்றினர். இப்போட்டியில் தோல்வியடைந்த யாழ்.பல்கலைக்கழக அணி, கிருஸ்கொப்பர்ஸ் அணியுடன் QUALIFIER II போட்டியில் கலந்து கொள்வார்கள்.

இதில் வெற்றி பெற்ற அணி இன்று ஞாயிற்றுக் கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத் தில் இறுதிப்போட்டியில் (40 ஓவர்) கலந்து கொள்வார்கள் என்பது குறிப்பிடத்தக்கது (4)



யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான எல்லே போட்டியில் யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலய அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இதன் இறுதியாட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இதன் இறுதியாட்டத்தில் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலய அணியை எதிர்த்து புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி வழங்கப்பட்ட 30 பந்துகளில் ஓட்டம் எதனையும் பதிவு செய்ய முடியவில்லை. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வாதரவத்தை வித்தியாலய அணி ஒரு ஓட்டத்தை பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. (படம்:-கனகராஜா)

### ஆண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டி
# கிண்ணங்களை வழித்துத் துடைத்தது சுழிபுரம் விக்டோரியா கல்லூரி



வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியில் அனைத்து வயதுப் பிரிவிலும் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இதன் இறுதியாட்டங்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

16 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அணி மோதியது.

இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் முகமாக விளையாடினர்.

இருப்பினும் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணியினரின் நுட்பமான ஆட்டத்தில் 25:21, 25:20 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

18 வயதிற்குட்பட்ட ஆண்களிற்கான இறுதியாட்டத்தில் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய அணி மோதியது. இதில் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணி 25:19, 25:12 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

20 வயதிற்குட்பட்ட ஆண்களிற்கான இறுதியாட்டத்தில் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அணி மோதியது. இதில் ஏக ஆதிக்கம் செலுத்திய சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணி 25:19, 25:14 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர். (4-90)

# பஞ்சாப்பை வீழ்த்தியது லக்னோவ்



ஐ.பி.எல். இருபது-20 தொடரின் 42 ஆவது லீக் போட்டியில், லக்னோவ் சுப்பர் ஜியண்ட்ஸ் அணி 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

புனேவில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், லக்னோவ் சுப்பர் ஜியண்ட்ஸ் அணியும் பஞ்சாப் கிங்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின. இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பஞ்சாப் கிங்ஸ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோவ் சுப்பர் ஜியண்ட்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 153 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, குயிண்டன் டி கொக் 46 ஓட்டங்களையும் தீபக் ஹூடா 34 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பஞ்சாப் கிங்ஸ் அணியின் பந்துவீச்சில், ரபாடா 4 விக்கெட்டுகளையும் ராகுல் சஹார் 2 விக்கெட்டுகளையும் சந்தீப் ஷர்மா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 154 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பஞ்சாப் கிங்ஸ் அணியால், நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 133 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது.

இதனால், லக்னோவ் சுப்பர் ஜியண்ட்ஸ் அணி 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.




இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஜோனி பேயர்ஸ்டொவ் 32 ஓட்டங்களையும் மாயங் அகர்வால் 25 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

லக்னொவ் சுப்பர் ஜியண்ட்ஸ் அணியின் பந்துவீச்சில், மோஷின் கான் 3 விக்கெட்டுகளையும் துஸ்மந்த சமீர மற்றும் குர்னல் பாண்டியா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் ரவி பிஷ்னோய் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக நான்கு ஓவர்கள் பந்து வீசி ஒரு உதிரி ஓட்டம் மற்றும் ஒரு மெய்டன் ஓவர் அடங்கலாக 11 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 2.80 ஓட்ட வீதத்துடன் 2 விக்கெட்டுகளை வீழ்த்திய குர்னல் பாண்டியா தெரிவுசெய்யப்பட்டார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்கின்றோம்



பிறப்பு
1940 . 12 . 16

இறப்பு
2022 . 04 . 29

எமது பாடசாலையின் அதிபர்.திரு.கு.**திலீபன்** அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர். **கந்தையா குலசிங்கம்**

(மூத்த ஊடகவியலாளர்,சமாதான நீதவான்)

அவர்களின் துயரச் செய்தியால் துயரமடைகின்றோம்.அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(11228)

பாடசாலைச் சமூகம்
யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை.

# 31ம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்
24.09.1937

ஆண்டவன் அடியில்
01.04.2022

கலாபூஷணம்
அமரர். **சின்னத்துரை நவரத்தினம்**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

இசையோடு கல்வி அறிவூட்டி நல் ஆசானாகவும் பாசமிகு தந்தையாகவும், நல்ல வழிகாட்டியாகவும் எம் தாய்க்கு நல்ல கணவராகவும் எம் குடும்பத்தின் நல்ல தலைவராகவும் காவலனாகவும்,சிவ நாமத்தை சிந்திப்பவராகவும் விளங்கி சிவனடியை சரண் புகுந்த எங்கள் அன்புத் தெய்வமே உங்களைப் பிரிந்து தவிக்கின்றோம்.
உங்கள் பசுமையான நினைவுகள் எம் நெஞ்சைவிட்டகலாது.

உங்கள் ஆத்மா சாந்தி பெறட்டும்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி (சீ-4287)

துவாரகை,
கரணவாய் கிழக்கு,கரவெட்டி.

குடும்பத்தினர்

# இராகலையில் இருந்து காலிமுகத்திடலை நோக்கி நடைபயணத்தை ஆரம்பித்தார் மரதன் ஓட்ட வீரர்




(ஹற்றன்)

உடபுசல்லாவை சேர்ந்த மரதன் ஓட்ட வீரரான மணிவேல் சத்தியசீலன் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இராகலையில் இருந்து கொழும்பு காலி முகத்திடலை நோக்கி நடை பயணத்தினை ஆரம்பித்துள்ளார்.

அவர், நாட்டில் தற்போது நிலவி வரும் பிரச்சினைகளுக்கு அரசு உடனடியாகத் தீர்வு வழங்க வேண்டும், உரப்பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை, எரிவாயு மற்றும் பொருட்களின் விலை உயர்வு போன்ற பிரச்சினைகளுக்கு அரசு தீர்வு வழங்க வேண்டும் என வலியுறுத்தி இராகலையில் மத வழிபாடுகளின் பின்னர் நுவரெலியா , ஹற்றன் , கினிகத்தனை , அவிசாவளை வழியாக கொழும்பு காலிமுகத் திடலை நோக்கி நடை பயணத்தினை ஆரம்பித்துள்ளார். (நி-6)

# அனைவரும் ஒன்றிணைந்து சவாலை எதிர்கொள்வோம்

## மே தின வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி



(கொழும்பு)

உலகவாழ் உழைக்கும் சமூகம் மிகப் பெரும் சவாலை எதிர்கொள்ளும் நேரத்தில், இவ்வருட சர்வதேச தொழிலாளர் தினம் நினைவு கூறப்படுகின்றது.

நமது நாட்டில் கடந்த மூன்று வருடங்கள் பாரிய சவாலுக்கு உள்ளாகியதும் தொழிலாளர் வர்க்கமே ஆகும். அத்தனை சவால்களையும் எதிர்கொண்டு விடாமுயற்சியுடன் தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்த உறுதி பூண்டவர்களும் அவர்கள்தான். நாளுக்கு நாள் அவர்கள் மீதான அழுத்தங்கள் தற்போது அதிகமாக உள்ளன. அதிலிருந்து மக்களை மீட்டெடுப்பதற்கும், நிலவுகின்ற சிக்கலான நிலைமையினைக் கட்டுப்படுத்துவதற்கும் அரசாங்கம் பல்வேறு அணுகுமுறைகளை மேற்கொண்டு வருகின்றது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார். ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த மே தின வாழ்த்துச் செய்தியில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அந்நியச் செலாவணி இழப்பானது பல பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது. அவை அனைத்தையும் முகாமைத்துவம் செய்வதுதான் தற்போதைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழியாகும்.

இந்த நாட்டு மக்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கான பொறுப்புடன் ஒன்றிணைந்து செயற்படுமாறு அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் அரச தலைவர் என்ற வகையில் மக்கள் சார்பாக நான் அழைத்தேன். ஒவ்வொரு நொடியும் மக்களின் துன்பத்தைத் தீர்க்கக்கூடிய வழிமுறைகளுக்குச் சென்று, தற்போதைய நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதே எமது குறிக்கோள்.

இந்த தொழிலாளர் தினத்தில், அனைவரும் ஒன்றிணைந்து எதிர்கொண்டுள்ள சவாலை வெற்றிகொள்ள மக்களுக்காக ஒருமித்த கருத்துக்கு வருமாறு அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களையும் நான் மீண்டும் ஒருமுறை அழைக்கிறேன்.

உழைக்கும் மக்களுக்காக அரசியலை ஒதுக்கி வைத்துவிட்டு, போராட்டத்தை மக்கள் சார்பான புரட்சிகர மாற்றத்துடன் நேர்மறையான திசையில் கொண்டு செல்ல ஒன்றிணையுமாறும் உழைக்கும் மக்களிடம் கௌரவமாக கேட்டுக்கொள்கிறேன்.

உலகளாவிய தொழிலாளர் சக்தியான தொழிலாளர் சகோதரத்துவத்தை உருவகப்படுத்தும் உலக தொழிலாளர் தினத்தை கொண்டாடுவதில் நான் உங்களுடன் இணைந்துகொள்வது அந்த அபிலாஷைகளுடனேயே ஆகும் என அவர் தெரிவித்தார். (நி-6)

# இராசிபலன்

01.05.2022
சித்திரை18, ஞாயிற்றுக்கிழமை
பிரதமை பின்னிரவு 3.28 மணிவரை
பரணி முன்னிரவு 10.20 மணிவரை
சுபநேரம்-8.57-10.27 மணிவரை
இராகு காலம்- 4.27-5.57 மணிவரை
சித்திரைப்பரணி, தொழிலாளர் தினம்
சந்திராஷ்டமம்- உத்தரம், அத்தம்.

வளவன்

**மேஷம்** ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள், திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம்.

**ரிஷபம்** பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச்சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம், சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**மிதுனம்** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்** நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், உறவினர்களும், நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**சிம்மம்** மறைமுகப் போட்டிகள் எதிர்ப்புகள் அகன்று வியாபார விருத்தி ஏற்படும், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ரோக பயமுண்டு.

**கன்னி** மற்றவர்களை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும்,வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**துலாம்** உறவினர் சந்திப்பால் உற்சாகம் பெருகும் நாள் ,பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்,வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**தனுசு** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், புத்தி சாதுர்யமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், மைத்துனர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம்.

**மகரம்** மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**கும்பம்** எதற்காகவும் வீண் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது, உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கலாம், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.

**மீனம்** குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பொது நல ஈடுபாட்டில் ஆர்வம் கூடும், வாக்கு மேன்மையுண்டு, வார்த்தைகளில் நிதானம் தேவை.

மற்றவர்களை சந்தோசப்படுத்துபவனே உண்மையில் சந்தோசப்படுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தொழிலாளர் தினம்



மே தினம் உலகத் தொழிலாளர்களின் ஒற்றுமையையும், உறுதியையும் குறிக்கும் தினம் அத்துடன் போராடினால் வெற்றியை அடைய முடியும் என்பதை உறுதிப்படுத்திய தினம்.

அமெரிக்காவில் 1890ஆம் ஆண்டு 8 மணிநேரம்வேலை, 8 மணி நேரம் ஓய்வு, 8 மணி நேரம் உறக்கம் என்னும் கோரிக்கையை வலியுறுத்தியும், உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கேட்டும் தொழிலாளர்கள் போராடினர். இதை எதிர்த்து அமெரிக்க அரசு, ஈவிரக்கம் அற்ற தாக்குதலை நடத்தியது. ஏராளமான தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.

உலகத் தொழிலாளர்களின் துன்பத்திற்கான காரணத்தைக் கண்டறிந்து, முதலாளிகளை ஒழித்துக்கட்டி தொழிலாளர்கள் ஆட்சியில் அமர்ந்தால்தான் அனைத்துவிதமான துன்பங்களும் தீரும் என்றும், முதலாளிகள் உலக வரலாறின் வளர்ச்சிப் போக்கையே தடுத்து வருகின்றனர் என்றும், இதனை முடிவுக்குக் கொண்டு வரும் வல்லமை தொழிலாளர்களிடம் மட்டும்தான் உள்ளது என்றும் கூறி இதையெல்லாம் செய்வதற்கு, "உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்" என்றும் கூறினார் ஒப்பற்ற பொதுவுடைமைக் கொள்கையை உலகுக்குத் தந்த ஆசான் கார்ல் மார்க்ஸ். உலகெங்கும் உள்ள தொழிலாளர்களின் இடைவிடாத போராட்டத்தால் இந்த வெற்றி நிலை நாட்டப்பட்டது.

தொழிலாளர்களின் உழைப்பினால்தான் உலகமே இயங்குகிறது. தொழிலாளர்களின் உழைப்பு இன்றி எந்தப் பொருளும் உருவாவதில்லை என்பதை உணர்ந்தனர். தாம், விலங்குகளைவிட கீழ்த்தரமாக நடத்தப்படுவதையும், உழைப்பின் பலன்களை எல்லாம் அனுபவிக்கும் முதலாளிகள், தொழிலாளர்களை வறுமையிலும் துன்பத்திலும் இருக்கும்படி செய்கின்றனர் என்பதை உணர்ந்து ஒன்றுபட்டு உரிமைக்காகப் போராடினர்.

1886 ஆம் ஆண்டு அமெரிக்க தொழில் நகரங்களான நியூயோர்க், சிக்காகோ, பிலடெல்பியா, மில்விக்கி, சின்சினாட்டி, பால்டிமோர் என அமெரிக்கா முழுவதும் 3,50,000 தொழிலாளர்கள் பங்கேற்ற மாபெரும் வேலை நிறுத்தம் துவங்கியது. இந்த வேலை நிறுத்தத்தில் 1200க்கும் மேற்பட்ட நிறுவனங்களில் பணிபுரிந்த தொழிலாளர்கள் பங்கெடுத்துக் கொண்டனர். தொழிலாளர்களின் எழுச்சிமிக்க வேலை நிறுத்தத்தினால், அமெரிக்க பெரு நிறுவனங்கள் மூடப்பட்டன. இரயில் போக்குவரத்து நடைபெறவில்லை. வேலை நிறுத்தத்தில் பங்கேற்ற தொழிலாளர் ஊர்வலங்கள் அமெரிக்காவை உலுக்கியது. மிச்சிகனில் மட்டும் 40,000 தொழிலாளர்களும், சிக்காகோவில் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களும் கலந்து கொண்டனர்.

அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள தொழிலாளர் இயக்கங்களை இணைத்து "அமெரிக்க தொழிலாளர் கூட்டமைப்பு" என்ற இயக்கம் உருவாக்கப்பட்டது. இவ்வியக்கம் 8 மணி நேர வேலை கோரிக்கையை முன்வைத்து தொடர்ந்து போராட்ட இயக்கங்களை நடத்தியது. அத்தோடு மே 1, 1886 அன்று நாடு தழுவிய வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விடுத்தது. இவ்வியக்கமே மே தினம் பிறப்பதற்கு காரணமாகவும் அமைந்தது.

இவ்வாறு உலகெங்கும் நடந்த போராட்டத்தின் விளைவாக அமெரிக்காவில் இதற்கான வெற்றியை அடைந்தனர். தொழிலாளர்களின் போராட்டத்தால் நிலைகுலைந்த அரசு அவர்களின் கோரிக்கையை 1890ஆம் ஆண்டு ஏற்றது. தொழிலாளர்களின் இந்த வெற்றியை குறிக்கும் விதத்தில் மே முதல் நாள் தொழிலாளர் தினமாக மே தினம் என்று உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது.

# எரிபொருள் நிரப்பு நிலையங்களில் முறைகேடுகள்- அங்கஜன் எம்.பி

(சாவகச்சேரி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இடம்பெறுகின்ற முறைகேடுகளை இல்லாதொழிக்க அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மாவட்ட அரசாங்க அதிபருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.இது தொடர்பாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பிய கடிதத்தில் மாவட்டத்தில் இயங்குகின்ற எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கிடைக்கப்பெறும் எரிபொருட்களை விநியோகிப்பதில் சீரின்மை, பதுக்குதல் மற்றும் பரல்களில் மீள் விற்பனைக்காக வழங்குதல் போன்ற முறைகேடுகள் இடம்பெறுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதனை நிவர்த்தி செய்ய மாவட்ட செயலகத்தில் உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து, அவர் ஊடாக மக்களின் குறைபாடுகள் மற்றும் முறைப்பாடுகளைப் பெற்று அதனை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு தெரியப்படுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதற்காக தொலைபேசி இலக்கம் ஒன்றினை அறிமுகப்படுத்த வேண்டும். இதனூடாக எரிபொருள் விநியோகத்தில் இடம் பெறுகின்ற முறைகேடுகள் சீர் செய்யப்பட்டு மக்கள் வரிசையில் காத்துக்கிடப்பதனை தவிர்க்க முடியும்.

இவ்வாறான முறைகேடுகள் இடம்பெறுவதாக முறைப்பாடு கிடைக்கப் பெறும் பட்சத்தில் எந்த விதமான பாரபட்சமும் இன்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவும் மேலும் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டார்.(4-6-30)

# அராலி பாலத்தடியில் விபத்து முதியவர் படுகாயம்

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி பாலத்தடியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், பட்டா ரக வாகனம் ஒன்று காரைநகரில் இருந்து யாழ். நோக்கி அராலி வீதியூடாக பயணித்துக்கொண்டிருந்தது.

இதன்போது குறித்த வாகன த்திற்கு பின்னால் முதியவர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்தது வந்து கொண்டிருந்தார். வீதிக்கு குறுக்கே மாடு சென்றதால் பட்டா ரக வாகனம் திடீரென நிறுத்தப்பட்டது. இந்நிலையில் பின்னால் மோட்டார் சைக்கிளில் வந்த முதியவர் வாகனத்தில் மோதி விபத்துக்குள்ளானர்.

விபத்தில் படுகாயமடைந்த முதியவர் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (4-6-104)

# விளாம்பழ யூஸ் அருந்திய பெண் மருத்துவமனையில்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட நுணாவில் பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் விளாம்பழ யூஸ் அருந்திய 48 வயதுடைய பெண் ஒருவர் திடீர் சுகவீனமுற்று சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சாவகச்சேரி சுகாதார பகுதியினருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த வர்த்தக நிலையத்தில் காணப்பட்ட விளாம்பழ யூஸ் மாதிரிகளைப் பெற்று பரிசோதனைக்காக கொழும்பிற்கு அனுப்பி வைத்திருப்பதுடன் அதன் முடிவுகள் கிடைத்த பின்னர் உரிய சட்டநடவடிக்கை மேற் கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளனர். (4-6-30)

# எரிவாயு சிலிண்டர் திருட்டு

(கரணவாய்)

வடமராட்சியில் எரிவாயு சிலிண்டர் திருடப்பட்ட சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.வடமராட்சி மந்திகைப் பகுதியில் இயங்கும் பாற்சாலை ஒன்றிலேயே குறித்த திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யபட்டுள்ளது. (4-6-60)

# இந்தியா செல்ல முயன்ற 13 பேர் யாழில் கைது

(அராலி)

சட்டவிரோதமாக இந்தியா செல்வதற்கு முயன்ற திருகோணமலையைச் சேர்ந்த 13பேர் நேற்று முன்தினம் இரவு யாழ். வளலாய் கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது அவர்கள் பயணித்த ஒரு டிங்கி படகும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

அவர்கள் தற்போது காங்கேசன்துறை கடற்படை முகாமில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர். கடற்படையினரின் விசாரணையின் பின்னர் அவர்கள் பலாலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும்திருகோணமலையைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் அவர்களில் ஆண்கள் 05, பெண் கள், சிறுவர்கள் 5 என மொத்தமாக 13 பேர் உள்ளடங்குகின்றனர்.(4-6-104-33-18-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணமகள் தேவை

இந்து சைவ, கௌரவ குடும்பம், வயது 31, உயரம் 5'8" யாழ். வைத்தியசாலை DOCTOR (M.B.B.S), அழகிய வெள்ளை நிறமானவர் திருமணத்திற்கு அதே வயதிலும் குறைந்த பல்கலைக் கழகப் பட்டம் பெற்றுத் தொழில் புரியும் அழகிய மணமகள் தேவை.

நேரடித் தொடர்பிற்கு
077 989 7931

(11229)

# ஜெயக்குமார் திருமண சேவை

1987 கனடா, 1990, 1982, ஜேர்மன், 1991 லண்டன் மணமகள்களுக்கு மணமகன்மார், 1988, 1986 ஜேர்மன் மணமகன்மாருக்கு மணமகள்மார் தேவை.

தங்கள் தேடுதலுக்கும், தகுதிக்கும் ஏற்ற மணமக்கள் தேவையெனின் எம்முடன் தொடர்பு கொள்ளவும். உள்நாட்டு வெளிநாட்டு மணமக்கள் தாராளமாக உள்ளனர்.

076 733 8071 , 076 475 2219 , 077 023 7639
WhatsApp - German - 004917643399372

(11225)

# St. John's Academy & College of Technology

TVEC

**G.C.E. O/L = NVQ 3**
**G.C.E. A/L = NVQ 4**

O/L, A/L Boys & Girls! Can Apply

*TVEC Registration No.P25/0076*

Application form issue : 06.05.2022
Closing Date for Applications : 03.06.2022
Course Commencement : 6th June 2022

**Available Courses**

- Pre School Teacher NVQ Level - 04
- Computer Hardware Technician Level - 03 & 04
- Information and Communication Technology Level - 03 & 04

For further details:
Call over at the office during 08.00 am- 3.30 pm on working days.

St.John's College,
446 Main Street,
Chundikuli,
Jaffna
Tel : 021 221 6680
Email : sjcjaffna@gmail.com

(C-4263)

# சென்.ஜோண்ஸ் கல்லூரி-யாழ்ப்பாணம்

## வேலையாட்கள் தேவை (ஆண்)

எமது கல்லூரிக்கு வேலையாட்கள் தேவை. தங்களது சுயவிபரக் கோவையுடன் பிறப்புச் சான்றிதழ், அடையாள அட்டை ஆகியவற்றின் போட்டோ பிரதிகளையும் மற்றும் கிராம சேவகரின் நற்சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ் ஆகியவற்றினையும் இணைத்து 10.05.2022 ற்கு முன்பு பதிவுத் தபாலில் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

அதிபர்
சென்.ஜோண்ஸ் கல்லூரி
யாழ்ப்பாணம்.

(C-4265)

# ST.JOHN'S COLLEGE, JAFFNA

## VACANCY

Applications are hereby invited from qualified persons to teach:
Western Music - Grade 6-11

Please send your complete CV with the contact details of two non-related referees by registered post to reach before 10th May 2022 to the address given below:

**The Principal**
**St.John's College**
**Jaffna**

(C-4264)

# வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகு
# வடக்கு மாகாண இளைஞர்களுக்கான இலவச வாய்ப்பு

வடக்கு மாகாண இளைஞர், யுவதிகளின் முயற்சியாண்மையை ஊக்குவிக்கும் செயற்பாட்டினூடாக வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்தைக் கொண்டு பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் - யாழ்ப்பாணம் அலுவலகத்துடன் இணைந்து நடாத்தும் ஒரு இலவச நிகழ்ச்சித்திட்டம்.

பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் - யாழ்ப்பாணம் அவர்களினால் மே மாத முற்பகுதியில் நடாத்தப்படவுள்ள கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் பயிற்சிநெறிகளுக்கான விண்ணப்பங்கள் எமது இளைஞர் விவகார அலகினூடாகக் கோரப்படுகின்றன.

பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் - யாழ்ப்பாணம் அவர்களினால் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறும் ஒழுங்கில் (25 -30 பேர்) குழு **அணி அணியாக வகுப்புக்கள்** ஆரம்பிக்கப்படும்.

வகுப்புக்கள் **பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் அமைந்துள்ள பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் - யாழ்ப்பாணம் அலுவலக வளாகத்திலுள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் (அம்மாச்சிக்கு அருகாமையில்) இடம்பெறும்.

**3 நாள் பயிற்சிநெறிகள்**

- கூட்டெரு தயாரித்தல் (Organic manure Compost Production)
- சேதன திரவ உரம் தயாரித்தல் (Organic Liquid Fertilizer Production)

**2 நாள் பயிற்சிநெறிகள்**

- வீட்டுத் தோட்டம் (Home Gardening)
  1. நகர்ப்புற வீட்டுத் தோட்டம் (Urban Area - Home Garden)
  2. சேதன வீட்டுத் தோட்டம் (Rural Area – Organic Home Garden)
- காளான் வளர்ப்பு (Mushroom Production)
- பண்ணை இயந்திரங்களின் செயற்பாடு மற்றும் பராமரிப்பு (Operation and Main tenance of Farm Machinery)
- தூறல் நீர்பாசனம் மூலம் நீர் பயன்பாட்டு திறனை மேம்படுத்தல் (Improve water use efficiency through Micro Irrigation)
- பழவகை விளைச்சலில் பயிற்சி மற்றும் சீரமைப்பு (Training and Pruning in Fruit Cultivation)
- சேதன பூச்சிகொல்லி உற்பத்தி (Organic Pesticide Production)

**1 நாள் பயிற்சிநெறிகள்**

- தேனீ வளர்ப்பு (Bee Keeping)

**தகைமைகளும் நிபந்தனைகளும்**

- வயது:- 19 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.
- பயிற்சிக் கட்டணம்:- இலவசம்
- பயிற்சிநெறிகளுக்கான தங்கள் தெரிவினை 18.05.2022 புதன்கிழமை காலை வடக்கு மாகாண கல்வியமைச்சில் நடைபெறும் கலந்துரையாடலில் மேற்கொள்ள முடியும். கலந்துரையாடலில் கட்டாயம் பங்குபற்றுதல் அவசியம் என்பதை நினைவிற் கொள்ளவும்.
- முதலாவது அணிக்கான விண்ணப்ப முடிவுத்திகதி 09.05.2022
- பிந்திக் கிடைக்கும் விண்ணப்பதாரிகள் அடுத்தடுத்த அணிக்கான வகுப்புக்களில் இணைத்துக்கொள்ளப்படுவர்.

விண்ணப்பப்படிவத்தின் மென்பிரதிகள் பெற்றுக்கொள்ளக்கூடிய இணையத்தளங்கள்
FB Page: http://www.facebook.com\youthnorth
http://edumin.np.gov.lk

**விண்ணப்பப்படிவத்தின் வன்பிரதிகள் பெற்றுக்கொள்ளக்கூடிய இடம்** (அரச வேலை நாட்களில் காலை 9:00 - 4:00 வரை)
வடக்கு மாகாண கல்வி அமைச்சு, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

**தொடர்பு இலக்கம்** - 021 222 2203 (அரச வேலை நாட்களில் காலை 9:00 மாலை 4:00 வரை)

மேலும் பல போட்டிகள், பயிற்சிநெறிகள் மற்றும் செயலமர்வுகள் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இவ்விபரங்களை பெற்றுக்கொள்ள இணையத்தினூடாக எம்முடன் இணைந்திருங்கள்.

இ.வரதீஸ்வரன்,
செயலாளர்
கல்வி அமைச்சு
வடக்கு மாகாணம்

## வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகு வழங்கும் வடக்கு மாகாண இளைஞர்களுக்கான இலவச யோகக்கலை வகுப்புக்கள்

வடக்கு மாகாண இளைஞர், யுவதிகளின் உடல் உள நல மேம்பாட்டிற்கான யோகக்கலை இலவச நிகழ்ச்சித்திட்டம்.

பங்குபற்றுதலுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படும்.

வகுப்பிற்கான குறித்தளவு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதும் குழுக்களாக வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும்.

வகுப்புக்கள் யா/நல்லூர் மங்கையர்கரசி வித்தியாலயத்தில் சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் காலை 6:00 மணிக்கு இடம்பெறும்.

**தகைமைகளும் நிபந்தனைகளும்**

- **வயது** :- 19 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்
- **கட்டணம்** :- இலவசம்
- **பங்குபற்றுநர்களின் வதிவிடம்**:- வடக்கு மாகாணத்திற்குட்பட்டதாக இருத்தல் வேண்டும். (வகுப்புக்கள் நல்லூர் - யாழ்ப்பாணத்தில் மட்டும் இடம்பெறும்.)
- விண்ணப்ப முடிவுத்திகதி 21.05.2022

**விண்ணப்பப்படிவத்தின் மென்பிரதிகள் பெற்றுக்கொள்ளக்கூடிய இணையத்தளங்கள்**
FB Page: http://www.facebook.com\youthnorth
http://edumin.np.gov.lk

**விண்ணப்பப்படிவத்தின் வன்பிரதிகள் பெற்றுக்கொள்ளக்கூடிய இடம்**(அரச வேலை நாட்களில் காலை 9:00 - மாலை 4:00 வரை)
வடக்கு மாகாண கல்வி அமைச்சு, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

**தொடர்பு இலக்கம்** - 021 222 2203 (அரச வேலை நாட்களில் காலை 9:00 - மாலை 4:00 வரை)

மேலும் பல போட்டிகள், பயிற்சிநெறிகள் மற்றும் செயலமர்வுகள் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இவ்விபரங்களை பெற்றுக்கொள்ள இணையத்தினூடாக எம்முடன் இணைந்திருங்கள்.

(C-4266)

**இ.வரதீஸ்வரன்,**
**செயலாளர்**
**கல்வி அமைச்சு**
**வடக்கு மாகாணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிவாயு சிலிண்டர் வழங்குமாறு கோரி வாகன சில்லுக்கு அடியில் படுத்து போராட்டம்

(கரணவாய்)

எரிவாயு சிலிண்டர் வழங்குமாறு கோரி சிலிண்டர் ஏற்றி வந்த வாகனத்தின் சில்லிற்கு அடியில் படுத்து ஒருவர் போராட்டம் மேற்கொண்ட சம்பவம் உடுப்பிட்டியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, சமையல் எரிவாயு ஏற்றி வந்த வாகனம் உடுப்பிட்டி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு எரிவாயு சிலிண்டரை வழங்கியுள்ளது.

இதையறிந்த பொதுமகன் ஒருவர் தமக்கான எரிவாயுவை வழங்காது வாகனத்தை எடுப்பதற்கு அனுமதி வழங்க மாட்டேன் எனக் கூறி வாகனத்தின் சில்லுக்கு அடியில் படுத்து தனது எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

இதனையடுத்து பல மக்கள் ஒன்று கூடி தமது எதிர்ப்பையும் வெளிக்காட்டினர்.

இதனையடுத்து குறித்த பகுதிக்கு வந்த பொலிஸார், முகாமையாளர் மற்றும் பொது மக்களுடன் கலந்துரையாடினார்.

அதன் பின்னர் முகாமையாளரால் பொதுமக்கள் 30 பேருக்கான பெயர் விபரம் எடுக்கப்பட்டு சமையல் எரிவாயு வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் கலைந்து சென்றனர். (4-6-60)

# உறவுகள் நேற்று கவனயீர்ப்பு போராட்டம்



(கிளிநொச்சி)

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டம் நேற்று கிளிநொச்சி, வவுனியா, மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அலுவலகம் முன்பாக இடம்பெற்றது.

மாதம் தோறும் 30 ஆம் திகதி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

குறித்த போராட்டத்தில் பதாகைகளை ஏந்தியிருந்ததுடன், படங்களையும் தாங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6-100-299-316)

# யோகக்கலை கற்கைநெறியின் புதிய பிரிவு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகக்கலை கற்கை நெறியின் புதிய பிரிவு எதிர்வரும் 21.05.2022 அன்று நல்லூர்க் கந்தன் ஆலயபின் வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

சனி, ஞாயிறுதினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6.00 மணிமுதல் 8.00 மணிவரை நடைபெறும் இவ் வகுப்புகளில் 19 வயதிற்கு மேற்பட்ட ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் கலந்து கொள்ள முடியும்.

மூன்று மாதகாலங்களைக் கொண்டமைந்த இவ் அடிப்படைக் கற்கை நெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படும்.

பயில விரும்புவோர் வட மாகாண கல்வி அமைச்சிலோ அல்லது அதன் இணையத் தளத்திலோ விண்ணப்பப்படிவங்களை பெற்று 21.05.2022 திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கல்வி அமைச்சு வடமாகாணம், இளைஞர் விவகார அலகு, செம்மணிவீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும்முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்குமாறு அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் அரச வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (4-6)

# பரிபாலன சபைக்கூட்டம்

(குப்பிழான்)

யாழ்ப்பாணம் வண்-வடகிழக்கு இறைமூத்த நைனார் (கொண்டிலடி விநாயகர்) ஆலய விசேட பரிபாலன சபைக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த விசேட கூட்டத்தில் பரிபாலன சபை உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (4-6-18)

# சங்கிலிகள் திருட்டு நால்வருக்கு விளக்கமறியல்

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் இரண்டு தங்க சங்கிலிகளைத் திருடிய இருவரும் அச்சங்கிலிகளை விலைக்கு வாங்கிய இருவரும் தருமபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட நால்வரையும் நேற்று நீதிமன்றில் முற்படுத்திய போது எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (4-6-316)

# புனித நோன்பு பெருநாளை கொண்டாடுவோம்

இறை அருளையும் பாவ விமோசனத்தையும் அடைய ரமழான் எனும் விஷேட மகத்துவமான மாதத்தை வழியனுப்பி வைத்து கவலையில் ஆழ்ந்த இறை விசுவாசிகளுக்கு ஆறுதலாகவும் மகிழ்ச்சியாகவும் இறைவன் வழங்கிய மாண்பு மிக்க தினமே புனித நோன்புப் பெருநாள் தினமாகும்.

புனித ரமழான் மாதத்தில் பகல் முழுவதும் நோன்பு நோற்று, இரவெல்லாம் வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு வந்த முஸ்லிம்கள் ஷவ்வால் மாத தலைப்பிறை தென்பட்டவுடன் ஈதுல் பித்ர் எனும் ஈகைத் திருநாளை குதூகலமாக கொண்டாடுகின்றனர்.

நோன்புப் பெருநாளுக்கு ஒவ்வொரு முஸ்லிமும் தயாராகும் போது பித்ரா (தர்மம்) கொடுப்பதைக் கொண்டே தயாராக வேண்டும் என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். நோன்புப் பெருநாள் தர்மம் நோன்பின் போது ஏற்பட்ட தவறுகளுக்குப் பரிகாரமாகவும் ஏழை, எளியவர்கள் பெருநாள் தினத்தில் பசி, பட்டினியோடு இருக்கக் கூடாது என்ற நோக்கங்களின் அடிப்படையிலும் கடமையாக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம்களின் பெருநாள் தினம் தனித்துவமானதாகவும் முன்மாதிரியானதாகவும் அமைய வேண்டுமென்று இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. முஸ்லிம்கள் இந்த நாட்டில் தனியாக வாழ்பவர்கள் அல்லர். நாம் பெரும்பான்மை சமூகங்களுடன் இரண்டறக் கலந்தே வாழ்கிறோம். எனவே அவர்களின் உணர்வுகளை மதிக்க வேண்டும். அவர்கள் ஆவேசப்படுகின்ற, ஆத்திரப்படுகின்ற சூழ்நிலைகளை நாம் உருவாக்கக்கூடாது.

வறிய மக்களின் துயர் துடைக்கும் பித்ரா என்ற கடமையுடன் பெருநாள் தொடங்குவதன் காரணமாகவே பித்ர் என்ற வார்த்தையுடன் சேர்ந்து ஈதுல் பித்ர் என்று இப்பெருநாள் அழைக்கப்படுகின்றது. பெருநாள் தினத்தில் இரவு, பகல் இரண்டு வேளைகளுக்கு தனக்கும் தனது பராமரிப்பிலுள்ள குடும்ப அங்கத்தவர்கள் அனைவருக்கும் போதுமான அத்தியாவசிய வாழ்க்கை வசதிகளையுடைய ஒவ்வொரு முஸ்லிமும் இத்தகைய வசதிகள் அற்ற அல்லது வசதிகள் குறைந்த ஏழைகளுக்கு கட்டாயமாகக் கொடுப்பதற்குரிய நன்கொடையே ஸகாதுல் பித்ர் எனப்படும்.

பெருநாள் தினத்தன்று சகல முஸ்லிம்களும் சந்தோஷமாக உண்டு மகிழ வேண்டும், எவரும் பசியுடன் இருக்கக் கூடாது என்ற சமுதாய நோக்கு முதலாவதாகவும், பித்ராவை வழங்கும் ஒவ்வொருவரும் ரமழான் மாதத்தில் விட்ட பிழைகளுக்குப் பரிகாரமாகவும் ஸகாதுல் பித்ர் இருப்பதனால் நோன்பாளிகள் பரிசுத்தவான்களாக மாறுவதனால் [illegible] நன்மை பெறுவது இரண்டாவது நோக்கமாகவும் திகழ்கின்றது.



கலாபூஷணம் அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (ஜே.பி) - யாழ்ப்பாணம்.

இலங்கையில் சிறுபான்மையாக வாழும் முஸ்லிம்களாகிய நாம் எமது பெருநாளின் சிறப்புக்களை மாற்று மத இனங்களுடன் பகிர்ந்துகொள்வதில் எந்தத் தவறுமில்லை. அவ்வாறு நாம் முன்மாதிரியாக நடந்து கொள்ளும் போதுதான் இந்த நாட்டில் இன நல்லுறவைக் கட்டியெழுப்ப முடியும். ஒருவருக்கு இருக்கும் உரிமைகளும்மத, கலாசார கொள்கைச் சுதந்திரங்களும் தொழில் நடவடிக்கைகளும் இன்னுமொருவருக்கு இடைஞ்சலாக இருக்க முடியாது என்பது ஜனநாயக தத்துவங்களில் ஒன்றாகும்.

எமது நாட்டில் ஏற்பட்டிருக்கும் [illegible] னாக. ஆமீன்.

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 400 | 320 | 340 | 360 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 180 |
| பச்சைமிளகாய் | 400 | 300 | 280 | 300 |
| தக்காளி | 380 | 350 | 240 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 120 | 120 | 80 |
| கோவா | 100 | 130 | 120 | 160 |
| கரட் | 180 | 200 | 180 | 200 |
| பூசணி | 80 | 70 | 70 | 80 |
| புடோல் | 200 | 140 | 160 | 200 |
| வாழைக்காய் | 50 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 280 | 280 | 300 | 280 |
| பெரிய வெங்காயம் | 180 | 190 | 180 | 200 |
| பாகற்காய் | 400 | 450 | 400 | 500 |
| வெண்டிக்காய் | 200 | 140 | 160 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 150 | 150 | 200 |
| பயற்றங்காய் | 300 | 340 | 220 | 200 |
| லீக்ஸ் | 160 | 160 | 200 | 200 |
| பீற்றூட் | 160 | 180 | 160 | 250 |
| கறிமிளகாய் | 250 | 150 | 200 | 280 |
| முருங்கைக்காய் | 700 | 600 | 500 | 1000 |
| போஞ்சி | 400 | 400 | 360 | 500 |
| கத்தரிதம்புள்ள | 380 | 250 | -- | 320 |
| கீரை - 1 பிடி | 140 | 120 | 100 | 140 |
| தேசிக்காய் | 350 | 250 | 350 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 65 | 50-70 |
| இராசவள்ளி | 200 | 200 | 180 | 200 |
| வெங்காயப்பூ | -- | -- | -- | -- |
| முள்ளங்கி | 60 | 100 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 60 | 70 | -- | 50 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 30 |
| ஈரப்பலா | -- | -- | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயம் இன்னதென்று அறிந்தும் அதை நீ செய்யாதிருப்பது கோழைத்தனமாகும்.
*– கோன்பு தஸன்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஊழலுக்கு எதிரான போராட்டம் உச்சமடையும் நாள்

இன்று மே தினம். சர்வதேச தொழிலாளர் தினம்.

ஒரு காலத்தில் அடிமைப்படுத்தப்பட்ட தொழிலாளர் வர்க்கத்துக்கு உரிமை கிடைத்த நாள்.

முதலாளித்துவ வர்க்கம் தொழிலாளர் வர்க்கத்தை அடிமைப்படுத்தி, அவர்களை இரவு பகலாகக் கசக்கிப் பிழிந்து வாட்டி வதைத்த கொடுமை அகன்று ,தொழிலாளர்களின் உரிமை பாதுகாக்கப்படுவதற்கான சாசனம் எழுதப்பட்ட நாள்.

அதனால் சர்வதேச தினங்களில் மே தினம் என்பது எழுச்சி கொள்கின்ற நாளாக உலகம் முழுவதும் வியாபித்திருப்பதைக் காண முடியும்.

எனினும் 2022ஆம் ஆண்டின் மே தினக் கோசம் இலங்கையில் வித்தியாசமாக அமைகிறது.

ஆம், தகுதியற்ற அரசாங்கத்தை ஆட்சிப் பீடத்தில் இருந்து அகற்றுவதற்காக அனைத்து மக்களும் ஒன்றுசேர்ந்து அரசாங்கத்துக்கு எதிராகப் போராடுகின்ற நாளாகப் பரிணமித்துள்ளது.

இந்த நாள் ஊழலுக்கு எதிரான நாளாக, மக்களை வதைத்த ஆட்சியாளர்களை பதவியில் இருந்து இறக்குகின்ற நாளாக அமையப் போவது உறுதி.

உண்மை, கோட்டாபய ராஜபக்ஷவையும் அவரது அரசாங்கத்தையும் பதவி இறக்கம் செய்வதற்காகத் தென்பகுதி மக்கள் தொடர் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

அந்தப் போராட்டம் இன்னும் வெற்றி பெறவில்லை என்று யாரேனும் கணிப்பார்களாயின் அது மகா தவறாகும்.

உண்மையில் மக்களின் தொடர் போராட்டம் ராஜபக்ஷ குடும்பத்தை ஆட்டம் காண வைத்துள்ளது.

குடும்ப அரசியலின் ஒட்டுமொத்த விளைவு என்னவாக இருக்கும் என்பதை ஜனநாயகத்துக்குப் போதித்துள்ளது.

இதற்கும் மேலாக ராஜபக்ஷ குடும்பத்துக்குள் ஏற்பட் டுள்ள உடைவை – கசப்பை – காழ்ப்புணர்வை இனி யாராலும் சீர்மைப்படுத்த முடியாது என்ற அளவில் அவர்களுக்கிடையில் மோதலை ஏற்படுத்தியுள்ளது.

இது மக்கள் போராட்டத்தின் வெற்றித் தாக்குதலாகும். இந்தத் தாக்குதலால் நிலைகுலைந்துள்ள ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவராக ஆட்சியில் இருந்து வெளியேறுவர். இது நடந்தே ஆகும்.

இதனை உறுதிப்படுத்துவதாக இன்றைய மே தினம் அமைகிறது.

ஓ! அராஜகத்துக்கு – ஊழலுக்கு – மனித உரிமை மீறல்களுக்கு – குடும்ப அரசியலுக்கு எதிராகக் கிளர்ந்தெழும் இன்றைய மே தினம், அனைத்து இலங்கை மக்களுக்கும் ஒரு செய்தியைச் சொல்ல வேண்டும்.

அந்தச் செய்தி; இந்த நாட்டின் அனைத்து மக்களும் சம உரிமையோடு வாழ்வதற்கு உரித்துடையவர்கள். சகல மக்களினதும் உரிமை நிலை நாட்டப்படும்போதுதான் நாட்டில் அமைதியும் சமாதானமும் ஏற்படும் என்பதாக இருக்கும்.

# வடக்கு மீனவர்களுக்கும் உதவ முன்வாருங்கள்

பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு உதவ முன்வந்தது போல கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக இந்திய இழுவை மடி தொழிலால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு மீனவர்களுக்கும் தமிழக முதலமைச்சர் உதவ முன்வரவேண்டும் என யாழ். மாவட்ட கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளன தலைவர் அன்னராசா கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டு மீனவர்களால் கடந்த பத்து வருடமாக நாங்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றோம். அத்தோடு நாங்கள் இரண்டு இலட்சம் தொழிலாளர்கள் தமிழக இழுவை மடி தொழிலாளர்களால் பாதிக்கப்பட்டுள்ளோம்.

நாங்கள் கடந்த பத்து வருடங்களாக இழுவை மடி தொழிலை வட பகுதியில் நிறுத்துமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்டோம்.

நீங்கள் அது தொடர்பில் எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கவில்லை அது மிகவும் கவலையளிக்கின்றது.

நேற்று முன்தினம் சட்டசபையில் உணவு பொருட்களை அனுப்புவதற்கு எடுத்த தீர்மானத்தை போல வடக்கு மீனவ தொழிலாளர்களுக்காக இழுவை மடி பிரச்சினை தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.(4-6-104)

# உள்நாட்டு மதுபானங்களின் விலைகளைக் காட்சிப்படுத்துக

## கலால் திணைக்களம் கோரிக்கை

(கொழும்பு)

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மதுபானங்களின் திருத்தியமைக்கப்பட்ட விலைகளை விற்பனை நிலையங்களில் காட்சிப்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு மதுபானசாலை உரிமையாளர்களிடம் கலால் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

குறிப்பிட்ட சில நபர்கள் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு மதுபானங்களை விற்பனை செய்வதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் கலால் திணைக்கள ஆணையாளர் கபில குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

அதன் பிரகாரம் வாடிக்கையாளர்கள் செய்த முறைப்பாடுகளை ஆராய்ந்ததன் பின்னர் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

திருத்தப்பட்ட விலைகளை காட்சிப்படுத்தத் தவறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ம-7)

# புகையிரதம் மோதியதில் மாணவிகள் இருவர் காயம்

(கொழும்பு)

புகையிரதம் மோதியதில் பாடசாலை மாணவிகள் இருவர் காயமடைந்துள்ளனர்.

அம்பலாங்கொடை குலரத்ன பாலம் பகுதியில் இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது. விபத்தில் காயமடைந்த மாணவி ஒருவர் பலபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மற்றைய மாணவியும் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று காலை இரண்டு மாணவிகளும் தண்டவாளத்தில் பயணித்துக் கொண்டிருந்த போது புகையிரதம் ஒன்று வருவதை அவதானித்து தண்டவாளத்தை விட்டு வெளியேற முற்பட்டபோது புகையிரதம் மோதியுள்ளது.

17 வயதுடைய இரு மாணவிகளும் நேற்றுக் காலை மேலதிக வகுப்பில் கலந்து கொள்வதற்காகச் சென்று கொண்டிருந்தபோது இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-7)

# கோவிட் தொற்று; 33 பேர் அடையாளம்

(கொழும்பு)


கொரோனா தொற்று உறுதியான மேலும் 33 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 663,362 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 733 பேர் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-7)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்

## நமக்கு வியாதிகள் வருவது எதனால்?



இவை தவிர வியாதி வருவதற்கு மேலும் சில காரணங்கள் உள்ளன. பாவங்களால் வரும் சாபங்களாலும் வியாதிப்படுகின்றனர். இந்த சாபங்கள் அவர்களின் குடும்பத்தாரையும் பாதிக்கக்கூடும். இதற்கு தாவீது ராஜா செய்த தவறு ஒரு உதாரணம். தன்னையே நம்பி இருந்த மனிதனைக் கொன்று அவனது அழகான மனைவியை அபகரித்துக் கொண்ட பாவத்துக்காக, தாவீதுக்கும் அவளுக்கும் பிறந்த முதல் மகன் வியாதிப்பட்டு இறந்தான் (2 சாமு.12:15). இறைவன் சுகமாக்கும் சக்தி வெளிப்பட்டு , அதன் மூலம் பலர் அந்த சக்தியைப் பற்றி அறிந்து கொண்டு, அவரைப் பின்பற்ற வேண்டும் என்பதற்காக சிலரை வியாதிப்பட்டவனாக இறைவன் படைத்து விடுகிறார் (யோவான் 9:3). ஆக வியாதிகள் வருவதற்கு பல காரணங்கள் உள்ளன. மற்றுமொரு காரணமும் வேதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதை 1கொரி.11:27-30 ஆகிய வசனங்களில் காணலாம்.

அதாவது, தேவாலயங்களில் வழங்கப்படும் நற்கருணையில் (இயேசுவின் சிலுவைப் பாடுகளை நினைவுபடுத்துவதற்காக அவராலேயே உத்தரவிடப்பட்ட அப்பம்-திராட்சை ரசம் வழங்கும் நிகழ்ச்சி) பற்கேற்பதற்கு முன்னால் ஒவ்வொருவனும் தன்னைப்பற்றி அறிந்துகொள்வது அவசியம். நாம் குற்றம், பாவங்கள் செய்கின்றவராக இருக்கிறோமா? அல்லது, இயேசு கூறியபடி நினைவினாலும் செய்கையினாலும் சுத்தம் உள்ளவனாக இருக்கிறோமா? என்பதை நமக்கு நாமேகேட்டுப்பார்த்தால் தெரிந்துகொள்ள முடியும்.

குற்றவாளி என்று தெரியும் பட்சத்தில், நற்கருணை நிகழ்ச்சிக்கு போகவே கூடாது. இது தெரியாமல் சென்றிருந்தால் பரவாயில்லை. ஆனால் தெரிந்தும் இந்தப் பாவத்தைச் செய்தால், வியாதிப்படவோ அல்லது சாகவோ நேரிடும். யாரிடமாவது சண்டை போட்டு இருந்தாலோ அல்லது மனக்கசப்பினால் பேசாமல் இருந்தாலோ முதலில் அவர்களிடம் சமாதானமாகி விட்டுத்தான் நற்கருணையில் பங்கேற்ற வேண்டும். தேவாலயத்திற்கு காணிக்கை கொண்டு வருகின்றவர்களும் இந்தவகையில் சுத்தமானவர்களாக இருக்க வேண்டும் (மத்.5:24). -நம்மை ஆராய்வோமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப கிருது வருஷ புத்தாண்டுப் பலன்கள்

## தன வரவுகள் தாராளமாக வந்து சேரும்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



(அவிட்டம் 3, 4 பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 பாதங்கள் வரை)

பெயரின் முதல் எழுத்துக்கள்: கு, கூ, கோ, ஸி, ஸீ, ஸே, ஸோ, தா உள்ளவர்களுக்கும்

### கும்ப இராசி வாசகர்களே!

இந்தப் புத்தாண்டு உங்களுக்கு ஏழரைச் சனியில் விரயச் சனியின் ஆதிக்கமாகத் தொடங்குகிறது. அதே நேரம் தன- லாபாதிபதியான குரு தன ஸ்தானத்திலேயே சஞ்சரிக்கிறார். தனாதிபதியும், விரயாதிபதியும் சம விகித பலத்துடன் சஞ்சரிப்பதால், செலவிற்கேற்ற வரவு வந்து சேரும். எந்தக் காரியமும் தொடங்கியவுடன் சிறப்பாகவே முடிவடைந்து விடும். முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கும் ஆண்டு இது.

### புத்தாண்டின் தொடக்க நிலை

புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசி நாதன் சனி 12 ஆம் இடத்தில் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே விரயங்கள் கூடுதலாகத் தான் இருக்கும். வீடு மாற்றம், இடமாற்றம் ஏற்படலாம்.

எதை எந்த நேரத்தில் செய்ய வேண்டுமோ, அதை அந்த நேரத்தில் செய்து முடிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. என்றாலும் ஏழரைச் சனியின் ஆதிக்கத்தால் தடைகள் வரத்தான் செய்யும். இருப்பினும் காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடி விடும்.

உங்கள் இராசியிலேயே செவ்வாய், சுக்கிரன் இணைந்திருக்கிறார்கள். 3, 10 இற்கு அதிபதியான செவ்வாயும், 4, 9 இற்கு அதிபதியான சுக்கிரனும் இணைந்திருப்பதால் உடன்பிறப்புகளுக்கும், வாழ்க்கைத் துணைக்கும் நல்ல வேலை அமையும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. பிறருக்கு ஜாமீன் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேரும். உடன் பிறப்புகள் வாயிலாக வந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். சொத்து தொடர்பான குழப்பங்களுக்கு, நல்ல பதில் கிடைக்கும். அடகு வைத்த நகைகளை மீட்பீர்கள்.

உங்கள் இராசிக்கு 3 ஆம் இடமான சகாய ஸ்தானத்தில் சூரியன், புதன், ராகு சேர்க்கை பெற்றிருக்கின்றன. சூரியனும், புதனும் இணைந்திருப்பது நன்மைதான். என்றாலும் அவர்களோடு ராகுவும் சேர்ந்திருப்பதால் பெற்றோர் வழியில் சில பிரச்சினைகள்வரலாம். உடன் பிறப்புகளை கூட்டாக வைத்து செய்து வந்த தொழிலில், திடீர் மாற்றம் உண்டாகும். உயர் அதிகாரிகளைப் பகைத்துக் கொள்ள வேண்டாம். 9 இல் கேது இருப்பதால் தந்தை வழி உறவில் விரிசல் ஏற்படலாம். கோபத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

வருடத் தொடக்கத்திலேயே சுக்கிரனோடு செவ்வாய் இணைந்து 'சுக்கிர மங்கள யோக'த்தை உருவாக்குகிறார். சூரியனோடு புதன் இணைந்து 'புத ஆதித்ய யோக'த்தையும், குருவிற்கு 6 ஆம் இடத்தில் சந்திரன் அமர்ந்து 'சகட யோகத்தை'யும் ஏற்படுத்துகிறார்கள். செவ்வாயை சந்திரன் பார்ப்பதால் 'சந்திர மங்கள யோக'மும் உருவாகிறது. அதோடு குரு மற்றும் சனி ஆகிய கிரகங்கள் தன் சொந்த வீட்டில் பலம் பெற்றிருக்கின்றன. இத்தனை யோகங்களோடு உங்கள் இராசி அமைந்தாலும், விரயச் சனியின் ஆதிக்கம் இருப்பதால், கொஞ்சம் கவனத்தோடு செயற்பட வேண்டும்.

குருவின் ஆதிக்கம் சிறப்பாக இருக்கிறது. தன - லாபாதிபதியான குரு, தன ஸ்தானத்தில் இருப்பதால் பொருளாதாரப் பிரச்சினை ஏற்படாது. என்றாலும் ஏழரைச் சனியில் விரயச் சனியின் ஆதிக்கம் நடப்பதால் விரயம் கூடத்தான் செய்யும். எனவே செய்யும் செலவுகளை, சுப விரயங்களாக மாற்றிக்கொள்ளுங்கள்.

### குருவின் பார்வை பலன்

ஆண்டின் தொடக்கத்தில் மீனத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை, உங்கள் இராசிக்கு 6, 8, 10 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே அந்த மூன்று இடங்களும் புனிதமடைகின்றன. குருவின் பார்வை 6 ஆம் இடத்தில் பதிவதால் மறைமுக எதிர்ப்புகள் குறையும். மதிப்பும், மரியாதையும் உயரும். ஆரோக்கியத் தொல்லை அகலும். நல்ல உத்தியோக வாய்ப்புகள் கைகூடும். குருவின் பார்வை 8, 10 ஆகிய இடங்களில் பதிவதால் இழப்புகளை ஈடுசெய்ய எடுத்த முயற்சி வெற்றிபெறும். வெளிநாட்டில் இருந்து சொந்த ஊர் திரும்புவதில் இருந்த தடை விலகும். தொழில் நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். நீங்கள் பங்கெடுத்துப் பணியாற்றும் துறையிலேயே புதிதாக தொழில் தொடங்க நினைப்பீர்கள். ஏழரைச்சனியின் ஆதிக்கம் நடப்பதால் குடும்பத்தில் உள்ள மற்றவர்கள் பெயரில் தொழிலைத் தொடங்கி, நீங்கள் நிர்வாகம் செய்யலாம். வாடகைக் கட்டடத்தில் நடைபெற்ற தொழிலை, சொந்தக் கட்டடத்திற்கு மாற்றும் முயற்சி கைகூடும்.




### சனியின் வக்கிரமும், பெயர்ச்சிக் காலமும்

25.5.2022 முதல் 9.10. 2022 வரை, மகரத்தில் சனி வக்கிரம் பெறுகின்றார். சனியின் வக்கிர காலத்தில் மிகுந்த கவனம் தேவை. பொருளாதாரப் பற்றாக்குறை அதிகரிக்கும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காது.

உறவினர் பகை, உத்தியோகத்தில் பிரச்சினை, பயணங்களில் தடை போன்றவை ஏற்படும். உறவினர்களுக்கு செய்யும் நன்மை கூட, சச்சரவையே உண்டாக்கும். பிள்ளைகளின் பிரச்சினை மீண்டும் தலைதூக்கும். 29.3.2023இல் கும்ப இராசிக்குச் சனி செல்கின்றார். அந்தப் பெயர்ச்சிக்குப் பின்னர், ஜென்மச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால் ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். திட்டமிட்ட காரியத்தை திட்டமிட்டபடி செய்ய இயலாது. மன அமைதி குறையும்.

### வளர்ச்சி தரும் வழிபாடு

இந்த ஆண்டு முழுவதும் நன்மை பெற, தேய்பிறை அஷ்டமி நாளில் பைரவரை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இந்தப் புத்தாண்டில் விரயச் சனியன் ஆதிக்கம் மேலோங்கி இருப்பதால், அதிகமான விரயங்களை சந்திக்க நேரிடும். அதே நேரம் தனாதிபதி குருவும் நன்றாக இருப்பதால் திடீர் வரவும் உண்டு. கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட அனுசரித்துச் செல்லுங்கள். பிள்ளைகளால் தொல்லைகள் தொடரலாம். நல்ல வாய்ப்புகள் சில கைநழுவிச் செல்லும். உங்கள் பெயரில் சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய ஆண்டு இது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். பல்...

சேர்ந்த இருவருமாக மூன்று சிரேஷ்ட விரிவுரையாளர்களைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை நேற்று ஒப்புதல் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று சனிக்கிழமை காலை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் மதிப்பீடு, நேர்முகத் தேர்வு முடிவுகள் நேற்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அவற்றின்படி, மருத்துவ பீடாதிபதியும், சமுதாய மருத்துவ மற்றும் குடும்ப மருத்துவத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளருமான மருத்துவர் இ.சுரேந்திரகுமாரன் சமுதாய மருத்துவத் துறையில் பேராசிரியராகவும், வணிக முகாமைத்துவ பீடத்தின் கணக்கியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பி. பிரதீப்காந் கணக்கியலில் பேராசிரியராகவும், மனிதவள முகாமைத்துவத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜே.றொபின்சன் மனிதவள முகாமைத்துவத்தில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (ம-7,18,33)

## அரசுக்கு...

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையானது, தற்போதைய அரசாங்கத்தை ஆதரிக்கும், எதிர்க்கும் பாராளுமன்ற உறுப்பினர்களை மக்களுக்கு வெளிப்படுத்தும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் எதிர்ப்பு ஊர்வலத்தின் 5 ஆவது நாளான நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் பொதுமக்களுக்கு அதிகாரம் அளிக்கும் முக்கிய திட்டங்களையே எதிர்க்கட்சி செயற்படுத்தும் என்றார்.

ராஜபக்ச அரசாங்கத்தை அகற்றுவதற்காகவே பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

எதிர்வரும் வாரம் நாட்டின் எதிர்காலத்திற்கு மிகவும் தீர்க்கமான வாரமாக அமையும் எனவும் ஐக்கிய மக்கள்சக்தியின் இடைக்கால அல்லது அனைத்துக் கட்சி அரசாங்கத்தை அமைப்பதை ஆதரிக்காது என்றும் அவர் கூறினார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வாக இடைக்கால அரசாங்கத்தை அமைப்பது போன்ற சூதாட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் பங்கேற்காது என சஜித் பிரேமதாச உறுதியாக தெரிவித்துள்ளார். (ம-7)

## பதவியிலிருந்து...

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"மகாசங்கத்தினர் எந்த நிலைப்பாட்டை எடுத்தாலும் பிரதமர் பதவியிலிருந்து தான் ஒருபோதும் விலகமாட்டார் என்றும் மக்கள் ஆணையின் பிரகாரம் அந்தப் பதவியிலிருந்து ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஆட்சியை முன்நகர்த்துவார் என்றும் பிரதமர் எம்மிடம் குறிப்பிட்டார் என முன்னாள் அமைச்சரும் எம்.பியுமான ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் 113 இற்கும் மேற்பட்டோரின் ஆதரவு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அரசுக்கு இருக்கின்றபோது பிரதமர் பதவியை எப்படி இராஜிநாமாச் செய்ய முடியும் என்றும் பிரதமர் எம்மிடம் கேள்வி எழுப்பினார்.

பிரதமரின் இந்த நிலைப்பாட்டை நாம் வரவேற்கின்றோம். அவர் அரசமைப்பை மீறிச் செயற்படவில்லை. மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து அரசமைப்பின் பிரகாரமே அவர் செயற்படுகின்றார்.

குறுக்கு வழியில் பிரதமரைப் பதவியிலிருந்து விலக்கிவிட்டு ஆட்சியமைக்கத் துடிப்போர் இதைக் கவனத்தில்கொண்டு செயற்பட வேண்டும்" என்றார்.

எனினும் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கி சர்வகட்சி அரசை அமைப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அழைப்பு விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பொருளாதார...

தமிழர் கட்டமைப்பு கலந்துரையாடல் ஒன்றை நடாத்தியுள்ளது.

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் கலந்துரையாடல் நேற்று இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் இடம் பெற்றது.

இதில் வடக்கு - கிழக்கு சார்ந்த சைவ ஆதீன முதல்வர்கள், கத்தோலிக்க குரு முதல்வர்கள், சமய, சமூக, தொழிற்சங்கப் பிரதிநிதிகள், பல்கலைக்கழகம் சார் பேராசிரியர்கள், மாணவ பிரதிநிதிகள், மருத்துவர்கள், பொறியியலாளர், வங்கியாளர், ஊடகவியலாளர், கல்வி புலம் சார்ந்தோர் என பல்துறை ஆளுமை சார் செயற்பாட்டாளர்கள் தமது கருத்துக்களை பரிமாறினர்.

தமிழ்த் தேசி[illegible] நெருக்கடியை எவ்வாறு அணுகுவது, சிங்கள மக்களிற்கு, சர்வதேசத்திற்கு இந்த தருணத்தில் தமிழ் மக்கள் ஓர் திரட்சியாக எவ்வாறு எம் அடிப்படை அரசியல் பிரச்சினைகளை கொண்டு சேர்ப்பது, பொருளாதார பிரச்சினைக்கு மூலவேர்க் காரணமான தமிழ் மக்களின் மீதான அடக்குமுறைகளிற்கான தீர்வை பெற்றுக்கொள்ள சிங்கள மக்களிடையே மன மாற்றத்தை தூண்டல், சுயசார்பு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல் என பல கோணங்களில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

மேலும் வடக்கு, கிழக்கு தழுவிய மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தி ஒருங்கிணைப்புக் குழு தெரிவு செய்யப்பட்டது.

தொடர் கலந்துரையாடல்கள் வாயிலாக தென்னிலங்கை சிங்கள மக்களிற்கான செய்தியாக "உங்களை புரிந்து கொள்கின்றோம் எங்களை புரிந்து கொள்ளுங்கள்" எனும் தமிழ் மக்களின் அபிலாசைகளை ஒருமித்த குரலாக கொண்டு சேர்க்கும் வேலைத்திட்டங்களை பல தளங்களில் தொடர்ச்சியான கருத்தாடல்களுடன் முன்கொண்டு செல்வதாக தீர்மானிக்கப்பட்டு கூட்டம் நிறைவு பெற்றது. (ம-7,33)

## ஜனாதிபதியின்...

நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சந்திப்பில் புதிய பிரதமரின் கீழ் இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு ஜனாதிபதி இணங்கியுள்ளார் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மகி...

தில் இடம்பெற்ற மகாசங்கத்தின் நிகழ்வில் உரையாற்றிய ரஜரட்டை பேராசிரியர் ஒலங்கவத்தை சந்திரசிறி தேரர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தற்போதைய பொருளாதார அரசியல் நெருக்கடிகளிற்கு அரசாங்கம் தீர்வைக் காண வேண்டும் என அவர் வலியுறுத்தினார். உரிய துறைகளில் நிபுணர்களிடம் ஆலோசனைகளைப் பெற வேண்டும்எனதெரிவித்துள்ள அவர், மக்களின் வாழ்க்கைக்கு ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

அரசமைப்பில் உரிய மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும். நிறைவேற்று அதிகாரத்தின் அதிகாரங்களை [illegible] பாராளுமன்றத்தை வலுப்படுத்த வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம-7)

## விழிப்புடன்...

மே 3ஆம் திகதி விழிப்புடன் இருக்கவும்" என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க கூறியுள்ளார்.

இது தொடர்பில் தனது சமூக வலைத்தளத்தில் இது குறித்த பதிவொன்றை அவர் இட்டுள்ளார்.

இது ஒருபுறமிருக்க, அனுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் மூன்றாம் திகதி இரகசிய ஆவணங்கள் சிலவற்றை வெளியிடப்போவதாகவும் சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ம-7)

## இறுதிப்...

எனவும் தொழிற்சங்கப் பிரதிநிதி ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

அனைத்து தொழிற்சங்கங்களும் இணைந்து பாரிய ஹர்த்தாலுக்கு தயாராகி வருவதாகவும் அதனை மீளப்பெற முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, 6ஆம் திகதி விடியும் வரை காத்திருக்கக்கூடாது என்றும் ஜெயலால் அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார். நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துவதில் அர்த்தமில்லை என்றும் அவர் கூறினார். (ம-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 30/04/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1240
வெற்றி இலக்கங்கள்
ரிஷபம் 0 1 2 1 8 3

மெகா பவர்
திகதி 30/04/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1096
H 12 47 48 53 76

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.04.30
சீட்டிழுப்பு இலக்கம் 057
துலாம் 05 09 18 41 துலாம்

மஹஜன சம்பத
திகதி 2022/04/30
சீட்டிழுப்பு இலக்கம் 4748
D 3 8 7 7 5 8

தன நிதானய
திகதி - 2022.04.30
சீட்டிழுப்பு இலக்கம் - 778
F 09 13 21 59

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1551
வர்ணம்: மஞ்சள
சீட்டிழுப்பு திகதி: 2022.04.30
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,695,920/-
10 30 39 56 U

சனிதா Shanida
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.04.30
சீட்டிழுப்பு இல : 3886
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,837,880/-
வெற்றி இலக்கங்கள்
14 34 38 47 Y

சுப்பர் ஜக்பொட் ரூ.2,745,115/-
திகதி 2022/04/30
வெற்றி வாரம் 3437
வர்ணம் இள நீலம்
வெற்றி இலக்கங்கள் 07 08 55 57
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,589,020/-

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1725 நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022/04/30 தினம் சனி
D 25 36 49 71
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,230,284/-

சுவர்தன வாசனாவ
திகதி : 2022-04-30
வெற்றி வாரம் : 505 | வர்ணம் : சிவப்பு
சுப்பர் ஜக்பொட் ரூ.10,985,708/-
F 48 19 08 2
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.2,459,820/-
ரூ.11,081,732/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
E 04 06 27 36 55
சீட்டிழுப்பு வாரம் 901
வர்ணம் சிவப்பு
திகதி 2022.04.30 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 234,160,969/-
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரசாயன உரங்களுக்கு விசேட விலைச்சூத்திரம்

(கொழும்பு)

இரசாயன உரங்களை இறக்குமதி செய்யும் நிறுவனங்களுக்கு விசேட விலைச் சூத்திரம் அறிமுகப்படுத்தப்பட வுள்ளதாக விவசாய அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

பெரும்போகத் துக்காக யூரியா உள்ளிட்ட உரங்களை இறக்குமதி செய்வதற்க நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாகவும் மேலும் அரிசியின் விலையை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நெல் சந்தைப்படுத்தல் சபையினால் கொள்வனவு செய்யப்படும் மற்றும் இறக்கு மதி செய்யப்படும் அரிசி தொகைகள் சதொச மற்றும் பல்பொருள் அங்காடிகள் ஊடாக விற்பனை செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ம-7)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காடு புதிய செம்மணி வீதி ஆனந்தபுரம் பகுதியில் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- நிலப்பரப்பு
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- 14 அடி பாதையுடன்
- நல்ல தண்ணீர்ஊற்று சூழல்
- கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 2km தூரம்
- நல்லூர் கந்தசுவாமி கோவிலில் இருந்து 3km தூரம்

பார்வையிடும் நேரம் :

காலை 6 மணிமுதல் மாலை 6 மணி வரை

1 பரப்பின் விலை 750,000/=

தரகர் தேவையில்லை (11212)

ஜெயம்

077 814 7389, 077 241 7589

## தேவை

எமது சிறுவர் இல்லத்திற்கு,

பராமரிப்பாளர் (பெண்)
உளவளத்துணையாளர் (பெண்)
முகாமையாளர்

தகுந்த சம்பளம் வழங்கப்படும்.(நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)

உடன் தொடர்பு கொள்ளவும்!!!!!

பாரதி சிறுவர் அபிவிருத்தி நிலையம் (11197)

071 535 4500, 071 535 4501

## சிறுநீரகம் தேவை

25 வயதுடைய ஆண் ஒருவருக்கு B/O குருதி வகையுடைய சிறுநீரகம் தேவை.

தகுந்த சன்மானம் வழங்கப்படும். (11223)

077 311 9361

## IMMEDIATE VACANCY



Administrative Assistant

Duties
- Assisting Visa Applications
- Air Ticketing
- Office Administration

Requirements
- Fluent in English
- Relevant Experience

Salary-40'000/= (C-4270)

CIMS COLLEGE 0777068777

49A, Chappel lane, Jaffna ( near Jaffna Central college)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வசாவிளான் ஒட்டகப்புலத்தில் 39 பரப்புக் காணி 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

- அச்சுவேலி - தெல்லிப்பளை பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- பிரதான (காபற்) வீதியில் இருந்து 50m தூரத்தில்.
- ஒட்டகப்புலம் றோ.க.த.கலவன் பாடசாலைக்கு அருகாமையில்.
- 14 அடிப்பாதையுடன்.
- அச்சுவேலி பஸ் நிலையத்தில் இருந்து 2km தூரம்.

ஒரு பரப்பின் விலை: ஐந்து இலட்சம் (11215, 11217)

077 911 6983

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு ஒப்பந்த அடிப்படையிலோ / நாட் கூலியாகவோ வேலை செய்யக்கூடிய அனுபவமுள்ள மேசன், கூலியாள், தச்சுவேலை செய்பவர்கள் மற்றும் களஞ்சியக்காப்பாளர் தேவை. (11237)

077 777 0969

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

## LIVE IN CANADA

கனடாவில் முதியோர் பராமரிப்பு ஹோட்டல் முகாமைத்துவம் போன்ற துறைகளில் இலகுவாக வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ள (C-4270)

கனடாவில் வேலைவாய்ப்புகள், குடும்பத்துடன் நிரந்தர வதிவிடம், உயர்கல்வி ஆலோசனைகள்.

இலவச கருத்தரங்கு

01-05-2022 ஞாயிறு காலை - 11 மணி

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம்.

முற்பதிவு அவசியம் 0777-068-777

## விற்பனையாளர்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் எமது ஜவுளி நிறுவனத்திற்கு O/L, A/L படித்த புடைவை வியாபாரம் பழக ஆர்வம் உள்ள பெண்பிள்ளைகள் தேவை.

சென்னை பெசன் வேல்ட்
இல. 63, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம். (11240)


## மரண அறிவித்தல்

# கந்தையா குலசிங்கம்

**(ஊடகவியலாளர், அகில இலங்கைச் சமாதான நீதவான், முன்னாள் யாழ்.மாவட்ட வர்த்தக சங்க சமாசத் தலைவர்)**



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குலசிங்கம் அவர்கள் கடந்த 29.04.2022 வெள்ளிக்கிழமையன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா (விஷக்கடி வைத்தியர்) - ஆசைப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நகு லேஸ்வரியின் ஆருயிர்க் கணவரும் திலீபன் (அதிபர் - யா/கொக்குவில் ஸ்ரீ இராம கிருஷ்ண வித்தியாசாலை), சுஜீவன் (ஜேர்மனி), ஹர்சன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, நடராசா, தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் கவிதா (ஆசிரியர் - யா/திருக்குடும்ப கன்னியர் மடம்), ரேணுகா (ஜேர்மனி), நிலானி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் டிதுஷன், றதுஷன், அரண்யா, அக்ஷயா, அபினயா, அபிராமி, வேணிஷா, சக்ஸ்சன் ஆகியோரின் அருமைப் பேரனும் காலஞ் சென்றவர்களான சிவப்பிரகாசம், தேவராசா, நாகலிங்கம், சரஸ்வதி, பராசக்தி, பாக்கியலட்சுமி மற்றும் நாகம்மா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான சின்னராசா, நகுலாம்பிகை, நாகம்மா, கேசவநாதன் ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (02.05.2022) திங்கட் கிழமை காலை 10 மணியளவில் தாவடியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு, தாவடி. (11231)

தகவல்: குடும்பத்தினர்
தொலைபேசி: 077 670 1485


## வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி எருவன் கொடிகாமத்தில் ஏறக்குறைய 3 3/4 பரப்புக் காணியில் ஏராளவு போக்குவரத்து வசதியுடன் நல்ல நிலையில் உள்ள வீடு சுற்று மதிலுடனும் பயன்தரு ஏறக்குறைய 40 பெரிய, சிறிய தென்னை மரங்களுடன் விற்பனைக்கு உண்டு. (11155)

076 809 4807

## விற்பனைக்கு

TOYOTA Forklift 2.5 TON
16" - Italy தச்சுப் பட்டை
விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு (11237)

077 229 9533

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு அலுவலக வேலையாட்கள் தேவை. (11224)

077 830 8360
076 776 8444

## உயர்தர பௌதிகவியல் வகுப்பு

யாழில், வடமராட்சியில் விடைத்தாள் திருத்தும் அனுபவம் உடைய மேலதிக பிரதம பரீட்சகரான பிரபல விஞ்ஞான பட்டதாரி ஆசிரியரினால் காலை, மாலை வகுப்புக்கள் தனிப்பட்ட குழுக்களாக நடாத்தப்படுகின்றன.

தொடர்புகளுக்கு (11233)

077 600 4896

## நீர்க்கசிவு பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு

## Water Proofing

மழை காலங்களில் உங்கள் கட்டடங்கள், வீடுகள், கோவில்களில் ஏற்படும் நீர்க்கசிவினைத் தடுப்பதற்கு Finex ஸ்தாபனத்தாரின் அசல் கட்டட இரசாயனப் பொருட்கள் Barralastic Master Seal 540 போன்றவற்றை கொள்வனவு செய்யும்போது Finex ஸ்தாபனத்தில் அனுமதி பெற்ற முகவர்களிடம் மட்டும் பெற்றுக் கொள்ளவும். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள். உலகத்தரம்மிக்கது (11226)

போலி இரசாயனத்துடன்,
போலி முகவர்கள் உங்கள் இல்லம் தேடி வந்து கேட்பார்கள். ஏமாற வேண்டாம்.

FINEX இரசாயனப் பொருட்களை விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.

North and East Engineering
55, Stanly Road, Jaffna, Sri Lanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka

விலை : 60.00

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 341

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2053 | 01.05.2022 | தொலைபேசி : 021 222 3378







உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation
noolaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

இன்று மேதினம். சர்வதேச தொழிலாளர் தினமாகிய இன்றைய நாளில் தொழிலாளர்களுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வோம் என மாநாட்டுத் தலைவர் வாத்தியார் வைத்திலிங்கம் கூறினார். அதனைத் தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் பேராசிரியராக இருந்த திருமதி. இராஜேஸ்வரி மகேஸ்வரன் அவர்கள் அவுஸ்திரேலியாவில் காலமாகிவிட்டார். எமது தமிழ் மண்ணில் விஞ்ஞானப் பேராசிரியராக இருந்து அவர் ஆற்றிய சேவை அளப்பரியது.

இதேபோல யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதம நூலகராக இருந்த திருமதி. ரோகினி பரராஜசிங்கம் அவர்களும் இயற்கை எய்தி விட்டார்.

போர்க்காலச் சூழலில யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தின் இயங்கு நிலைக்குப் பெரும் பங்காற்றிய அவரின் மறைவு பேரிழப்பாகும்.

மேலும் ஊடகத் துறையில் செய்தியாளராக இருந்து பத்திரிகைத் துறைக்கு காத்திரமான பணியாற்றிய கந்தையா குலசிங்கம் அவர்களும் காலமாகி விட்டார். இவர்களின் மறைவு குறித்து ஆலடி மாநாடு தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் இவர்களுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

**கங்காணி:** அதுசரி விதானையார் நாட்டு நிலைமை எப்படிப் போகுது.

**விதானையார்:** இருபது நாள் கடந்தும் போராட்டம் தொடருது. ஆனால் இன்னமும் ஆட்சியாளர்கள் திண்ணையைக் காலி செய்யிறதாக இல்லை. பிரதமர் மகிந்தவை வெளியேற்றினால், தன்ர பதவியைத் தக்க வைக்கலாமெண்டு தம்பி கோட்டா நினைக்கிறார். ஆனால் மகிந்தவின்ர மகன் நாமல் அப்பாவின்ர பதவியைப் பறித்தால் நான் எதிர்க்கட்சியில அமருவன் எண்டு வெருட்டுறார். அப்படிப் பார்க்கும் போது, ராஜபக்ஷ தரப்பு இன்னும் கேவலப்படுவதற்கான சந்தர்ப்பம் இருக்கிறது போலத்தான் தெரிகிறது.

**சிறாப்பர்:** சாத்திரியார் தற்போது இலங்கையின்ர சாதக நிலை எப்படி இருக்குது.

**சாத்திரியார்:** இலங்கையின்ர சாதக நிலை தமிழ் மக்களுக்குச் சாதகமாக இருக்குது எண்டு தான் நான் சொல்லுவன்.

**மூப்பர்:** சாத்திரியார் சரியாகத்தான் சொல்லுகிறார். ஆனால் தென் பகுதியில எழுந்துள்ள சூழ்நிலையை நாங்கள் எந்தளவு தூரம் எங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தப் போறம் எண்டதிலதான் எல்லாம் தங்கி இருக்குது.

**விதானையார்:** ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் அவரது அரசாங்கத்தையும் வீட்டிற்கு அனுப்புகிற போராட்டம் ஆரம்பமாகி இருப்பது தொடர்பில, எங்கட ஆட்கள் ஒவ்வொரு கருத்தை முன்வைக்கினம்.

சிலர் சொல்லுகினம்; கோட்டாவை அனுப்பிவிட, இன்னும் மோசமான ஆள் ஆட்சிக்கு வந்தால் என்ன செய்யிறதெண்டு.

இன்னும் சிலரோ ஜனாதிபதி கோட்டாவை சர்வதேச நீதிமன்றில நிறுத்த வேணும் எண்ட கோசத்தை காலிமுகத்திடலில போராட்டம் நடத்துகிறவர்கள் ஏன் முன்வைக்கவில்லை எண்டு கேட்கினம்.

இன்னுமொரு தரப்புச் சொல்லுது; இனி என்ன நடந்தாலும் பரவாயில்லை, எங்கட இனத்தைத் துவம்சம் செய்த ராஜபக்ஷ குடும்பம் கந்தறுந்து காவடி எடுக்க வேணும். அதையும் சிங்கள மக்களே செய்ய வேணுமெண்டு. இப்படி ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு கருத்து.

**பண்டிதர்:** ஓ!இப்ப எங்களிட்ட இருக்கிற பிரச்சினை நான் அறிவாளி; எனக்கு அரசியல் கள நிலை நன்கு தெரியும்; நல்லா கதைக்கத் தெரியும்; நான் தான் எல்லாரையும் விடப் புத்திஜீவி என்பதை நிரூபிக்கிறது தானே!

அதற்காக இரவில நித்திரையும் கொள்ளாமல் கிடந்து கண்டபாட்டில யோசித்து உதவாத்த கருத்துக்களைத் தெரிவித்து கிடைத்த சந்தர்ப்பத்தையும் போட்டுடைக்கிறதுதானே எங்கட வேலையாக இருக்குது.

**விதானையார்:** உண்மைதான் கோட்டாபய ராஜபக்ஷவை சர்வதேச நீதிமன்றில நிறுத்த வேணும் எண்ட கோசத்தை காலிமுகத்திடலில தொடர் போராட்டம் நடத்திறவியள் முன்வைக்க வேணும் எண்டு நாங்கள் எதிர்பார்ப்பது அவ்வள்வு புத்திசாலித்தனமல்ல.

சிங்களவர்களில இன்னும் கணிசமானவர்கள் ராஜபக்ஷ குடும்பத்திற்கு ஆதரவாக இருக்கினம் எண்டதை நாங்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேணும்.

கோட்டாவை சர்வதேச நீதிமன்றில நிறுத்து எண்ட கோசம் எழுந்தால், சில வேளை காலிமுகத்திடல் போராட்டம் அண்டைக்கே முடிவுக்கு வந்து விடும்.

ஆகையால நாங்கள் கேட்க வேண்டியதை அவையள் கேட்கட்டும் எண்டு நினைச்சால், கிடைச்ச சந்தர்ப்பத்தையும் இழக்க வேண்டிய துரதிர்ஷ்டம் எங்களுக்காகி விடும்.

ஆகையால முதலில தமிழ் இனம் ஒன்றுபட வேணும். ஒன்றுபட்ட தமிழினம்-ஒரு சரியான தீர்மானத்தை எடுக்க வேணும். அந்தத் தீர்மானம் எங்களைப் பிரிச்சு விடுங்க எண்டு கேட்கிறதாகக் கூட இருக்கலாம்.

இவ்வாறு விதானையார் கூற அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.



## எங்களைப் பிரிச்சு விடுங்க எண்டு கேட்டால் என்னவாம்

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரியும் சாம்ராஜ்யம்

**"விதி வலிது; நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுவடை செய்ய முடியும். அந்த வகையில் ராஜபக்ஷ அரசும் விதைத்ததை அறுவடை செய்யத் தலைப்பட்டுவிட்டது."**

இந்த உலகிற்கு நாம் என்னத்தைத் தருகிறோமோ அதையே அது நமக்குத் திருப்பித் தரும் என்பது விதி.

மரத்தை நட்டு அதற்கு நீர் இறைப்போமாக இருந்தால் அது நமக்கு நிழலையும், நல்ல காற்றையும் கனியையும் தருவதுடன் மழையை பொழியவும் செய்யும்.

அதேயே ஒருவருக்கு நன்மை செய்வோமாக இருந்தால் அந்த நன்மை ஏதோ ஒரு வகையில் நமக்கும் நன்மையே தரும்.

மாறாக தீமை செய்வோமாக இருந்தால் நமக்கு தீமை கிடைப்பதை எவராலும் தடுத்துவிட முடியாது.

நாட்டின் தற்போதைய நிலைக்கும் இந்தத் தர்ம விதியே காரணமாக இருக்கின்றது என்றால் நாம் நம்பித்தான் ஆக வேண்டும்.

இது சிங்கள பௌத்த நாடு இங்கு சிங்களவர் தான் ஆட்சி அதிகாரத்துக்குரியவர்கள்.

இது சிங்களவர்களுக்கே உரித்தான நாடு. இங்கு பிற இனத்தவர் வாழலாம் ஆனால் இந்த நாட்டில் அவர்களுக்கு கடுகளவேனும் உரிமை இல்லை என்ற மமதையுடன் சிறுபான்மை இனத்தவரை ஓரம் கட்டிய தன் விளைவை இப்போது பெரும்பான்மை சிங்களவர் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

இனங்களுக்கிடையில் ஏன் முரண்பாடு வந்தது என்கின்ற ஒரு சிறிய சிந்தனை முடுக்கிவிடாத அவசரபுத்தி கொண்டவர்களாய் வாழ்ந்துவிட்டோமே என்பதை எண்ணி நாம் வெட்கம் கொள்வதை விட வேறு எதையும் செய்துவிட முடியாது.

உரிமை சார்ந்த பிரச்சினை ஓர் இடத்தில் எழுகின்றது எனின் அங்கு யாரோ ஒருவருடைய உரிமைகள் மறுக்கப் படுகின்றது என்ற முடிவுக்கு வந்துவிட முடியும்.

இனவாதம் - மதவாதத்தை தூண்டும் வகையில் அற்ப அரசியல் ஆதாயங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு செயற்பாடுகளும் பாரிய பூதாகாரமான விளைவுகளையே இந்த நாட்டிற்கு பரிசாகத் தந்திருக்கின்றன.

போர் ஒரு நாட்டை எவ்வாறு அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் என்பதற்கு இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போர் ஒரு நல்ல உதாரணம்.

இனங்களுக்கிடையில் ஏற்பட்ட மனக்கசப்பு மோதலாகி இரு இனங்களுக்கிடையிலான போராக உருமாறி அதனால் பல்லாயிரக்கணக்கான உயிர்களை பறிகொடுத்து பயங்கரவாதத்தை வென்றதாய் அறிவித்தது என்பது சிறுபான்மைத் தமிழினத்தை வென்றதான அறிவிப்பே தவிர, பயங்கரவாதத்தை வென்றதான அறிவிப்பாக அது இருக்கவில்லை.



ஒரு இனம் சொத்திழந்து, சுகமிழந்து, சொந்தபந்தம் தானிழந்து தவிக்கும் வேளை இன்னொரு இனம் போர் வெற்றி என்று பூரிப்படைவதென்பது மனித வரலாறுகளில் பதியப்படாத விசித்திரங்களே.

இறுதி யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான தமிழினம் கொல்லப்பட்டதும் இவை சர்வதேசம் வரை பேசப்பட்டதும் சர்வதேசத்திற்கு இங்கு என்ன வேலை என்று இலங்கை ஆட்சியாளர்கள் சர்வதேசத்தை அதட்டி இறுமாப்பு காட்டி,

இங்கு நாம் வைத்தது தான் சட்டம் நாம் நினைத்தது தான் நடக்கும் என்று முரசறைந்தார்கள்.

ஆனால் இறைவனின் தீர்ப்பு மாறாகவல்லவா அமைந்திருக்கிறது.

அந்த மாற்றம் வெறும் 13 ஆண்டுகாலங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆம், ஆட்சியாளர்களுக்கு எதிராக சிங்கள மக்கள் மேற்கொள்ளும் ஆர்ப்பாட்டம் மிகத்தீவிரமடைந்துவருகிறது.

ஆட்சியாளர்கள் செய்த திருகுதாளங்கள் எல்லாம் இப்போது கொஞ்சம் கொஞ்சமாய் மக்களுக்குப் புலப்படத் தொடங்கிவிட்டது.

தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பற்றி அனுரகுமாரதிச நாயக்க கூறும் போது.

'சிரித்துக் கொண்டே கொலை செய்யக் கூடிய நபர் கோட்டாபய' என்று கூறியதற்குள் இருக்கும் உண்மையை சிங்கள மக்கள் இப்போது புரிந்து கொண்டிருக்கலாம் ஆனால் தமிழினம் அதை எப்போதோ உணர்ந்துவிட்டது.

விதி வலிது; நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுவடை செய்ய முடியும். அந்த வகையில் இந்த ராஜபக்ஷ அரசும் விதைத்ததை அறுவடை செய்யத் தலைப்பட்டுவிட்டது.

மகாபாரதத்தில் கைகேயியின் சூழ்ச்சியால் இராமன் 14 ஆண்டுகள் காடேகினான். 2009 ஆம் ஆண்டு வன்னி யுத்தம் நடைபெற்று வெறும் 13 ஆண்டுகளிலேயே இந்த அரசுக்கு கடவுள் தன் தீர்ப்பை வழங்கியிருக்கின்றார்.

நிலை இதுவாக இருக்கையில் ராஜபக்ஷ அரசுக்கு எதிரான மக்கள் தன்னெழுச்சிப் போராட்டம் வெற்றி பெறும் நிலையை எட்டியுள்ளது.

இடைக்கால அரசாங்கம் ஒன்றை நிறுவ ஜனாதிபதி கோட்டாபய இணங்கியிருப்பதாக முன்னாள் ஜனாதிபதி மைத்தரிபாலசிறிசேன கூறியிருக்கின்றார்.

புதிய பிரதமரின் கீழ் இடைக்கால அரசு நிறுவப்படும் எனவும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

புதிய பிரதமர் என்கின்ற விடயம் இங்கு கவனிக்கத்தக்க விடயமாகிறது.

புதிய பிரதமர் ஒருவரை இடைக்கால அரசுக்கு நியமிக்க வேண்டும், எனில் ஏற்கனவே இருக்கின்ற பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பதவி விலக வேண்டும்.

ஆனால் அவர் பதவி விலக தயார் இல்லை. எனின் அடுத்த கட்டம் அவர் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும்.

பிரதமரை பதவி நீக்கம் செய் யக் கூடிய அதிகாரத்தைக் கொண்டவர் ஜனாதி பதி.

இங்கு தான் பாரிய சிக்கல் நிலை தோன்றியுள்ளது.

இது தொடர்பாக ஊடகம் ஒன்றிற்கு கருத்துத் தெரிவித்த முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ,

பிரதமர் பதவியில் இருந்து மகிந்தவை நீக்கினால் எதிர்க்கட்சி ஆசனத்தில் அமர்வேன் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆக ராஜபக்ஷக்களின் ஆட்சியை ஆட்டவும் முடியாது அசைக்கவும் முடியாது என்று எகத்தாளம் இட்டவர்களுக்குள்ளேயே பனிப்போர் எழத்தொடங்கிவிட்டது.

இனி என்ன நடக்கும் என்பதை பொறுத்திருந்து பார்ப்போமே.


**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## விசித்திர மருந்து



(நேற்றைய தொடர்ச்சி)

உன் கணவன் அந்த ரகத்தைச் சேர்ந்தவன். அதனால் தான் உன்னிடம் சொன்னேன். அவன் மனம் மாற வேண்டும்" என்றார்.

அப்போது அவள் "நீங்கள் ஏதோ மருந்து தயாரிப்பது பற்றிச் சொல்ல நினைத்தீர்களே. அதனால் குணமடையாதா?" என்று கேட்டாள். அவரும் "அது ஒன்றும் மருந்தில்லை. உப்பும் சர்க்கரையும் கலந்த பொடிதான் அது. அவன் மனதில் அந்த மருந்து நோயைப் போக்கி விடும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தினேன். தீர்த்த யாத்திரையின் போது உன் கணவன் முன் ஊராரோ உறவினரோ இல்லாததால் அது பற்றிய நினைப்பே அவனுக்கு வரவில்லை. தன் நோய் குணமடைகிறது என்று எண்ணினான். ஆனால் இந்த ஊருக்கு திரும்ப வந்ததும் மீண்டும் அந்த எண்ணங்கள் தோன்றி நோய் வந்துவிட்டது போல செய்து விட்டது" என்றார்.

அவள் "அப்படியானால் நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்கவே அவரும் "நீ லட்சுமணனையும் உறவினர்களையும் பற்றி உன் கணவனிடம் நல்லவிதமாக எடுத்துக் கூறு. இதனால் கொஞ்சம் கொஞ்சமாக அவன் எல்லோரும் நல்லவர்களே என்று எண்ண ஆரம்பிப்பான். பிறகு அவன் மனதில் புகுந்த பயம் போய் விடும்" என்றார். தனசேகரனும் அவன் மனைவியும் ஆச்சிரமத்திலிருந்து திரும்பிச் சென்றனர். அன்றிரவு அவன் மனைவி அவனிடம் "ஊரில் எல்லோரும் லட்சுமணனைப் புகழ்கிறார்களே! நீங்கள் மட்டும் ஏன் அவரிடம் விரோதம் பாராட்டுகிறீர்கள்?அவர் உங்களுக்கு என்ன கெடுதல் செய்தார்?" என்று கேட்டாள்.

அது கேட்டு தனசேகரன் சற்று யோசித்து "ஆமாம் லட்சுமணன் எனக்கு ஒரு கெடுதலும் செய்யவில்லை. இந்த ஊருக்கு வந்ததும் அவன் முதலில் என்னைக் கண்டு தான் வியாபாரம் ஆரம்பிக்கப் போவதாகக் கூறி என் ஆசிகளையும் கேட்டு வாங்கிக் கொண்டான். இன்றும் என்னைக் கண்டால் மரியாதையுடன் வணங்குகிறான்" என்றான்.


அப்போது அவன் மனைவி "இப்படிப்பட்டவரையா நீங்கள் உங்கள் விரோதி என்று யோகியிடம் கூறினீர்கள்? காரணமில்லாமல் லட்சமணனைப்பற்றி நீங்கள் கெட்ட அபிப்பிராயம் கொண்டிருப்பது போலத் தெரிகிறது. அதை முதலில் விட்டொழியுங்கள்" என்றாள். தனசேகரனும் 'ஆமாம் நீ சொல்வது சரியே. காரணமில்லாமல் லட்சுமணன் மீது பகைமை கொண்டேன். இது தவறுதான்" என்றான்.

அப்போது அவன் மனைவி மருந்து என்று ஒரு பொட்டலத்தை எடுத்து நீரில் கரைத்து குடிக்க தன் கணவனிடம் கொடுத்து "இதைக் குடியுங்கள். அப்போது லட்சுமணனை மட்டுமல்ல, உங்கள் உறவினர்களையும் கூட உங்கள் நண்பர்களாகக் கருதுவீர்கள். பகைமை என்பது உங்கள் மனதிலிருந்து போய்விடும். உங்கள் நோயும் போய்விடும்" என்றாள். இவ்வாறாக தனசேகரனை அவனது மனைவி யோகி கூறிய வழியில் நல்லவனாக மாற்றி விட்டாள். அவனது நோயும் போய்விட்டது.

(முற்றும்)

# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்




அரக்கி அயோ முகியின் மாயையில் அகப்பட்டிருந்த இலக்குவன் அம்மாயையின்று விடுபட்டுத் தெளிவு பெற்றான். அவள் மூக்கை அறுத்து அங்கக் குறைவினை ஏற்படுத்தினான். அவள் இட்ட கூக்குரல் அக்காடு முழுவதும் எதிரொலித்தது. அது இராமன் செவிக்கும் எட்டியது. இது ஓர் அரக்கியின் குரலாகத்தான் இருக்க முடியும் என்று இராமன் ஓரளவு அனுமானித்தான்.

அங்கையில் அக்கினி அத்திரம் எடுத்துக் கொண்டு ஒலி வரும் திக்கு நோக்கிப் புறப்பட்டான். புயற் காற்றைவிட வேகமாய் இலக்குவன் இருக்குமிடத்தை அடைந்தான். இலக்குவன் இராமனைப் பார்த்து "வள்ளலே! வருந்தற்க" என்று கூறினான். இழந்த கண்ணொளியை மீண்டும் பெற்றது போல் இராமன் மகிழ்ச்சி அடைந்தான். பிரிந்த கன்றை அடைந்த பசுவாய் விளங்கினான். "சென்ற இடத்தில் நடந்த நிகழ்ச்சிகள் யாவை?" என்று கேட்டான் இராமன். "அயோமுகி என்னும் அரக்கியின் மூக்கையும் செவியையும், [illegible]ளையும் அறுத்து முடித்தேன்; அவள் கூக்குரல் இட்டாள்; தப்ப விட்டேன்" என்றான்.

"உயிரைப் போக்காமல் விட்டது உத்தமம், அதுதான் அற நெறி" என்று அறிவித்தான். துன்பம் நீங்கி அமைதி பெற்று வருணனை நினைத்து மந்திரம் கூறினான் இராமன். அவன் மழை நீரைத் தர அதனைக் குடித்து இருவரும் நீர் வேட்கை தணித்தனர். அந்த மலையில் மணல் பரப்பில் இலக்குவன் அமைத்துக் கொடுத்த மரப் படுக்கையில் இராமன் படுத்துக் கொண்டான்; உணவும், உறக்கமும் இன்றி வேதனைப்பட்டான், சீதையின் நினைவு அவனை வாட்டித் துயில் இழக்கச் செய்தது.

### கவந்தன் வதை

சீதையைத் தேடி இருவரும் விடியற்காலையில் விரைவாய்ச் சென்றனர். கவந்தன் ஒரு தனிப்பிறவியாய் இருந்தான். இருந்த இடத்தில் இருந்தே எவ் உயிரையும் எட்டி வளைத்துப் பிடிக்கும் கரங்களை உடையவன் அவன், எறும்பு முதல் யானை ஈறாக எல்லா உயிர்களும் அவன் கையில் அகப்பட்டன. காட்டில் வாழும் உயிர்ப் பிராணிகள் அனைத்தும் அஞ்சி நடுங்கின. திக்குகள் அனைத்தையும் தன் கையில் அகப்படுத்திய நீண்ட கரங்களுக்கு இடையே இராமனும் இலக்குவனும் அகப்பட்டுக் கொண்டனர். இது அவர்களுக்குப் புதுமையாய் இருந்தது. "இது அரக்கர் செயலாய்த்தான் இருக்க வேண்டும். அதனால், சீதை மிக அண்மையில் தான் இருக்க வேண்டும்" என்று இராமன் கூறினான்.

"அரக்கர் செயலாய் இருந்தால் அவர்கள் முரசும் சங்கும் முழங்க வேண்டுமே என்று கூறி மறுத்தான் இலக்குவன். "நம்மைப் பிணித்திருப்பவை மந்தர மலையைச் சுற்றிய வாசுகி என்ற பாம்பாகத்தான் இருக்க வேண்டும்" என்று இலக்குவன் கூறினான். இருவருமே இரண்டு யோசனை தூரம் நெருங்கிச் சென்று அவ்வரக்கனை நேருக்கு நேர் சந்தித்தனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரசுக்குள்-ராஜபக்ஷ குடும்பத்துக்குள் பாரிய முரண்பாடு எழுந்து விட்டது போல தெரிகிறதே?

**தருஷ் — வதிரி**

**பஞ்சம் தலைவிரித்து ஆடத் தொடங்கி விட்டதே வியாசரே?**

இனவாதம் பேசி, மத வாதம் பேசி மனித உயிர்களை மண்ணாய் நினைத்து போரை ஆயுதமாகப் பாவித்து போருக்குள் கோடி கோடியாக் கொட்டி இந்த மண்ணை கந்தக பூமியாய் மாற்றி அந்த மணத்தை ஆசையாய் நுகர்ந்து அதை வெற்றி விழாவாய் கொண்டாடியவர்களுக்கு இறைவன் கொடுத்த தீர்ப்பைப் பார்த்தீர்களா?

இன்று பச்சிளம் குழந்தைகளுக்கு கொடுக்க தாயிடம் பால் இல்லை. பால்மா இல்லை வீட்டில் பானையில் சோறு இல்லை அடுப்பெரிந்து பல நாட்கள் ஆகிவிட்டதை பூனையின் இருப்பிடமாய் இருப்பது உணர்த்தி நிற்கிறது. என்ன செய்யப் போகிறோம் இறைவா நாம்.

**க.கே.ப — வதிரி**

**நல்லவர்கள் கையில் நாடு இருந்தால் எப்படியிருக்கும் வியாசரே?**

கறுப்பென்றும் சிவப்பென்றும் வேற்றுமையாய், கருதாமல் எல்லோரும் ஒற்றுமையாய், பொறுப்புள்ள பெரியோர்கள் சொன்னபடி, உழைத்தால் பெருகாதோ சாகுபடி.

இருந்திடலாம் நாட்டில் பல வர்ணக்கொடி, எத்தனையோ கட்சிகளின் எண்ணப்படி, பறக்க வேண்டும் எங்கும் ஒரே சின்னக் கொடி, பஞ்சம் இல்லை எனும் அன்னக் கொடி.

A.மருதகாசியின் இந்த வரிகளை உண்மையாக்கும் உத்தமர்களிடம் இருக்க வேண்டும்.

**நது — யாழ்ப்பாணம்**

**ஆட்சி மாற்றம் - காட்சி மாற்றம் எதுவும் நடைபெறுமா மாமா?**

ஆட்சி மாற்றம் நடந்து அதனால் தமிழினத்திற்கு ஏதும் மாற்றம் நடந்தால் இந்த விடயத்தில் நாம் புழுகப்பட்டு கொண்டாடி பயன் உண்டு.

ஆனால் இதனால் எமக்கு எந்தப் பயனும் இல்லைத் தம்பி.

அவர்கள் ஆழப்பிறந்த இனத்தவர்கள் முடிக்குரியவர்கள். அவர்கள் வைத்தது தான் இங்கு சட்டம்.

பயங்கரவாதிகள் நாம், எதுவும் எதிர்த்துப் பேசக்கூடாது இன்னும் எத்தனை கண்டிசன்கள் இவை எல்லாவற்றுக்கும் கடவுளின் தீர்ப்பு ஒன்று உண்டல்லவே அதுதான் இப்போது அறுக்கிறது.




**சாய்ந்து — வடமராட்சி**

**வாழ்வில் உருப்பட ஏதாவது வழியிருந்தால் சொல்லுங்கள் மாமா பிலீஸ்?**

திருந்திறது தான் திருந்தினாய், இப்போதா நீ திருந்த வேண்டும்.

மேசன் வேலைக்கு அனுப்புவம் என்றால் சிமெந்து இல்லை சரி போகுது தச்சு வேலைக்கு அனுப்புவம் என்றால் அதுக்கும் மேசன் வேலை செய்தால் தானே கோப்பிச வேலை நடக்கும்.

சரி கூலி வேலை எதுக்கும் போகலாம் என்டால் வீட்டுக்காரரே அந்த வேலையை இழுத்துப் போட்டுச் செய்யுதுகள்.

என்ன செய்யிறது நடு வீட்டுல விட்டத்தப் பார்த்துக் கொண்டிருந்தால் ஒன்றும் சரி வராது.

அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டங்களுக்காவது போய் வருவம் என்டா புலனாய்வுப் பயம் வாட்டுது.

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**021 567 1532**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**
**அல்லது ஆசிரியர், வியாசர் பதிவுகள், வலம்புரிப் பத்திரிகை, இல.03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்**



பஞ்சம் தலைவிரித்து ஆடத் தொடங்கி விட்டதே வியாசரே?

**சிவம் — வதிரி**

**ஒருவருக்கு இருக்கும் அறிவு என்பது எதைக் குறித்து நிற்கும் வியாசரே?**

சிலர் நினைப்பது அறிவு என்பது மொழி அறிவுதான் என. மொழி அறிவு என்பது ஒரு தொடர்பாடலை உருவாக்குவதே தவிர அது அறிவு ஆகிவிடாது.

இதை தெரியாத பலர் ஆங்கிலம் தெரிந்தவர் அனைவரும் அறிவாளி என்று அவர்கள் பின் கோட் சூட்டைப் போட்டுக் கொண்டு அலைவதனால் பயன் ஏதும் வந்துவிடாது.

மொழி அறிவு தான் அறிவு என்றால் என்றைக்கோ தமிழினத்திற்கான தீர்வு கிடைத்திருக்குமே.

அதுதான் டஸ் புஸ் என்று ஆங்கிலம் பேசுபவர்கள் நிறைய இங்கு இருக்கிறார்களே.

மொழி அறிவுதான் அறிவு என்ற அறிவீனத்தை அகற்றும் வரை அறிவில் தெளிவு வராது.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**அரசுக்குள்-ராஜபக்ஷ குடும்பத்துக்குள் பாரிய முரண்பாடு எழுந்து விட்டது போல தெரிகிறதே?**

எழட்டும் எழுந்தால் நமக்கு என்ன? நமக்கும் அவர்களுக்கும் தான் ஒட்டு உடைச்சல் எதுவும் இல்லையே. நம் ஈழத் தமிழினம் பட்ட இன்னல்களையும் அவர்கள் கொத்துக் கொத்தாய் மடிந்ததையும் எம்மால் மறக்க முடியுமா என்ன.

நம் தமிழினம் இட்ட ஓலம் அண்டசராசரங்களையே மிரள வைத்தது.

ஆனால் பயன் என்ன? எதுவும் இல்லை. இன்று ஆண்டவனால் வழங்கப்பட்ட தீர்ப்பிற்கு இவர்கள் கட்டுப்பட்டுத்தானே ஆக வேண்டும்.

இன்னும் உண்டு பொறுமையாய் இருந்து பார்ப்போம்.

**நிலக்ஷன் — வவுனியா**

**உணவுப்பொருட்களின் விலை இப்படி ஏறினால் என்னத்தை செய்து விட முடியும் வியாசரே?**

"இப்படியே போனாக்கா பூச்சி இங்கே வாழும்டா, புழுவும் இங்கே வாழும்டா, மனிசப் பயல் இனம் மட்டும் மண்ணாகிப் போகும்டா" என்ற அருமையான வரிகள் நிறைந்த பாடல் உங்கள் கேள்வியை வாசிக்கும் போது ஒலித்தது. கண்களின் ஓரம் கண்ணீரால் நனைந்தது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சிந்தனை

சிந்திக்காமல் எடுக்கும் காரியங்கள் தோல்வியாகுமே
நன்கு சிந்தித்து செய்யும் செயல்பாடுகள் வெற்றியாகுமே
சிந்தனைகள் மனிதனின் உணர்வோடு கலந்தவையே
உணர்வுகள் இல்லையாகில் மனிதன் நடைபிணமே

வாழ்க்கையில் சிந்தனை செயல்கள் தான்
கல்வியை உயரவைக்கும்
சிந்திக்க தெரிந்த மனிதன்
சமூகத்தில் சிறந்த மனிதனாகின்றான்
விஞ்ஞானியின் சிந்தனை உலகமானது
புதிய கண்டு பிடிப்புக்கள் வரும்
தவறான முடிவை எடுப்பவர்கள்
சரியாக சிந்தித்தாலே நன்றாக வாழ முடியும்

நல்ல ஆன்மீக சிந்தனைகள்
இறைவனிடம் எம்மை அழைச்துச் செல்கிறதே
சிந்திக்கும் ஆற்றல் சீராக இல்லையாகில்
மனிதன் நிலை தடுமாறும் நிலை வருமே
சிந்திக்காத சொல் செயல்கள்
பகைமை உணர்வை ஏற்படுத்துமே
சீரான குடும்ப வாழ்வுக்கு
சிந்தனை செயல் அவசியமே

சிந்தனை இல்லாத வாழ்வு சின்னாபின்னமாகுமே
சிந்தனையை இழப்போமானால்
மனிதனால் வாழ முடியாது
சீரும் சிறப்புமாக வாழ
சிந்தித்து செயல்படுவது அவசியமே
தெளிவே எம் சிந்தனை என வாழ்வோம்.

எஸ்.பி.தனா,
தெல்லிப்பழை.

## "மே தினம்"



நாட்டை நன்றே வளமாக்கிடவாய்
நாளும் உழைக்கும் தொழிலாளிகளோ
நன்மைகள் பற்பல பெற்றிடவாய்
நன்றே வாழ்த்திடுவதே மே தினம்

வறுமை கண்டு வாடமல்
வந்த துன்பம் துடைத்திடவே
வீரம் கொண்ட தொழிலாளியின்
வெற்றி நாளே மே தினம்

தினமும் வியர்வை சிந்தியே
தேசமே சிறப்புடன் உயர்ந்திடவாய்
துணிவு கொண்டு உழைப்பவரை
துதிக்கும் நாளே மே தினம்

உண்மையாய் நன்றே உழைப்பவரான
உயர்ந்த சிறந்த தொழிலாளிகளை
உழைப்பால் உயர்வுறும் உத்தமர்களை
உலகமோ போற்றும் நாளே மே தினமாகும்

தங்கத்தமிழன்,
காரைநகர்.

## போற்றிய உதடுகள் தூற்றின

தமிழன் போராட்டம் உரிமைக்கானது
சிங்களவன் போராட்டம் உணவுக்கானது
உயிரைக் கொடுத்தும் உரிமை கிடைக்கவில்லை
உரக்க கத்தியும் உணவின் விலை குறையவில்லை

எரிக்க வாயு இல்லை சமைக்க அரிசி இல்லை
நீரிழிவு நோயாளி போல் அடிக்கடி மின்வெட்டு
பொருட்களின் விலை விண்ணைத்தொடுகின்றது
ஏழைகளின் வயிறு வாடி வதங்குகின்றது


தமிழனை அடித்து தன்னலம் காத்தான்
பொருளாதாரத்தை சுரண்டி பொதுநலன் சாய்த்தான்
துட்கை முனுவின் வாரிசு என்றவர்கள்
துஷ்ரன் என்று கோஷம் எழுப்புகின்றனர்

முள்ளிவாய்கலில் முடங்கியது தமிழினம்
காலிமுகத்திடலில் காய்கிறது மூவினம்
யுத்த வெற்றியை வைத்து வெறித்தனமான இனவாதம்
பௌத்த சிந்தனையில் பரலோக வாழ்க்கை

கொட்டித்தீர்ந்தன வெளிநாட்டு நிதிகள்
மொட்டுக்குள் முடங்கின அமெரிக்க டொலர்கள்
போற்றிய உதடுகள் தூற்றுகின்றன
பேரிடர் கண்டும் தமிழன் பேசாமடந்தை

அராலியூர்,
ப.தர்மகுமரன்.

## மௌனத்தின் தேடல்- 558



## மறைக்கப்பட்ட பின்புலம்

கைகூப்பி காலடியில்
தலைசாயும் கடமை-அதன்
பதவியின் பரந்த அதிகாரம்
ஜனநாயகம் கொண்ட நாட்டின்
சனங்களை சாய்ப்பதும் உண்டே!
ஆட்சி கொண்டவன் வீங்கி நிற்க
வெற்றிடம் யாவும் பணத்தால் நிரப்ப
நீதியிழந்த பக்கம்-சாயுதே
கௌரவ தொப்பி
எதிர்ப்பவன் மாற்றானல்ல
மாறும் ஆட்சியில்-
இறுதியில் யாவரும்
நிற்கும் நிரந்தர இடம்-என்பதை
உணராதவனே இவ் இரு வேஷன்!

சு.சுருத்திகா,
யா/இ.ம.க

## மௌனத்தின் தேடல்- 559



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## புண்பட்ட மனம்

மூடை வயிற்றுப் பெருஞ்செல்வன்
ஏழையின் குருதி குடித்து மகிழ,
தொப்பி போட்ட அதிகார வர்க்கம்
இடைத்தரகர்களாக, பகடைக்காயான
ஏழையின் மனது நொந்து மடிகிறது

செ.தர்சிகா,
நாவற்குழி.

## மர்ம மனிதர்களே

முன்னொருக்கால் கிறீஸ் மர்ம மனிதர்
இன்று வாள்வெட்டுக்குழு
என்றும் பாதுகாப்பளிக்கும்
பணிமனை காவல் நிலையம் எனில்
நகர் காவலர் எனும் பட்டம்
நலமாமோ மனம் திருந்தி மானுடமாய்
நிலை மாறாத வரையில் இவரும்
மர்ம மனிதர்களே மறவாதீர

வாகை வளவன்
நாரந்தனை.

## இரட்டை தோற்றம்

செழிப்பான தோற்ற ஆட்சியாளரின்
அநீதியை போலி சட்டவாதிகள்,
நீதியாளர்கள், காவலர்கள்
பணிந்து காப்பர்
செழிப்பற்ற தோற்ற
குடி மக்களின் நீதியை,
செழிப்பான போலி ஆட்சியாளரின்
சட்டம், நீதி, துணிந்து
தாக்குவர் காவலர் என
சித்தரிக்கும் காட்சி!

சி.சுகிர்தமலர்,
[illegible]

## அடக்குமுறை

நம் நாட்டில் இன்று எம்மீது பாய்ந்த
ஆயுதம் என்றோ ஒரு நாள்
சிங்களவர்களை நோக்கியும்
திரும்பும் என என்றுரைத்தான் அன்று
எங்கள் வீரத்தமிழன்
அதுவே இன்று உண்மையாகிறது
பல நியாயமான கோரிக்கைகளை
முன்வைத்து காலிமுகத்திடலில்
போராடும் சிங்களவர்களை
இந்தப் பெரியவர் கண் முன்னே
இப்படி ஆயுதத்தால் தாக்கி
அடக்க முயலும்
காவல் துறையைப் பார்க்கையிலே

சுப்பிரமணியம் ஜெயரூபன்,
பருத்தித்துறை.

## விலாங்கு மீன்

ஐயா வணக்கமையா என்று
அரசியல்வாதியிடம் பம்மல்
ஆரடா உது என்று
பாமரனின் முதுகில் சம்பல்
பாருடா இந்த விலாங்கு பாம்பை
இன்று மக்கள்
புரிந்து விட்டனரே
நன்று நன்று...!


கஜரூபி,
அளவெட்டி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

**அடுத்த தடவை அகதிகள் யாராவது விடுதலையாகும் போது, தாங்களும் அகுனாவின் ஸ்டைலைப் பின்பற்றினால் என்ன என்பது போல, சில அகதிப் பெடியன்கள் சார்ளி கம்பவுண்டின் கிழக்குப் பக்க வேலியைப் போய் கண்களால் அளந்துகொண்டு நின்றார்கள்.**

## வலி சொல்லும் தொடர்... 30




**யா**ராவது அந்த வேலியால் பாய்ந்து ஓடினால், கட்டுப்பாட்டு அறையிலிருப்பவருக்கு, அது காட்சியாகத் தெரியாவிட்டாலும், ஏதோ அசம்பாவிதம் அந்த வேலிப் பக்கமாக இடம்பெறுகிறது என்பதை அலாரத்தின் உதவியோடு அலாரக் குறிப்பாக கண்டுகொள்ள முடியும்.

அன்றைய தினம், அந்த வேலி அலாரம் சிவப்பாக பொறிகாட்டியவுடன், கட்டுப்பாட்டு அறை அதிகாரி, வானொலியில் "கோடு யெல்லோ" என்று அலறியடிக்க, கிழக்குப் பக்கமாக அதிகாரிகள் ஓடிச்சென்று பார்ப்பதற்குள், அகுனா லாவகமாக வேலியால் பாய்ந்து, மரம் அறுக்கும் ஆலைக்குள் ஓடிச் சென்று, அதன் முன்வாயில் வழியாகப் பாய்ந்து ஓடியிருக்கிறான் என்பது, பொலிஸார் வந்த பிறகு தெரிந்தது.

'கோடு யெல்லோ' என்றால், முகாமுக்குள் இடம்பெற்றிருக்கும் பாரதூரமானதொரு சம்பவத்தைத் தடுப்பதற்கு மிக அவசரமாக உதவி தேவைப்படுகிறது.

மேலதிக அதிகாரிகள் எங்கிருந்தாலும் உடனடியாக அந்த இடத்துக்கு விரையவும் என்று, சங்கேத மொழியில் பொருள்படும்.

மாலைவேளை, மரம் அறுக்கும் ஆலையிலிருந்தவர்கள் வேலையை முடித்துவிட்டுப் போய்விட்டார்கள். பூட்டியிருந்த ஆலையை எவ்வாறு தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த முடியும் என்பது முதற்கொண்டு அனைத்தையும், அகுனா நுட்பமாகத் திட்டமிட்டிருக்கிறான்.

நான்கைந்து பொலிஸார் அகுனா ஏறிப்பாய்ந்த வேலிக்குக் குறுக்கும் மறுக்காக ஓடியோடிப் படமெடுத்தார்கள். மரமறுக்கும் ஆலை வரை சென்று வீடீயோ எடுத்தார்கள். முகாமின் வேலியை முழுவதுமாக மேய்ந்து முடித்துவிட்டு, அலுவலகத்தில் வந்து அகுனாவின் படங்கள் பலவற்றைப் பிரதியெடுத்துக்கொண்டு காரில் போய் ஏறிக்கொண்டார்கள்.

தாங்களும் ஏதாவது தகவல் கொடுக்க வேண்டும் என்று வந்த பொலிஸாரில் தலைமை வகித்த அதிகாரியைக் கலைத்துச் சென்று குடிவரவு அமைச்சு அதிகாரியொருவர், அகுனாவின் பின்னணி குறித்தும், அவன் நைஜீரிய உள்நாட்டுப் போரில் தப்பிவந்த அரசியல் போராளி என்றும் தாங்கள் இதுநாள் வரைக்கும் எடுத்து வைத்திருந்த அறிக்கைகளை விரல்களால் கோடிட்டுக் காண்பித்தார்.

முகாமின் வேலிகள் முழுவதையும் பாதுகாப்பு அதிகாரிகள் ஒவ்வொரு நாளும் சோதனை செய்கிறார்கள், இலகுவில் யாரும் தாண்டி ஓடிவிட முடியாது, இருந்தாலும் ஒருத்தன் தப்பியோடிவிட்டான் என்பதை நம்ப முடியாமலுள்ளது என்று அழுதுவிடாத குறையாக பொலிஸாரிடம் மன்றாட்டமாகக் கூறிக்கொண்டிருந்தார் குடிவரவு அதிகாரி. அவுஸ்திரேலியாவின் கடல் எல்லையை மாத்திரமன்றி, தரை எல்லையையும் ஒரு நைஜீரியாக்காரன் கெட்டித்தனமாகத் தப்பியோடியிருக்கிறான் என்றால், இதற்கு என்ன அர்த்தம் என்பது போல பொலிஸ் அதிகாரியும் குடிவரவுத்துறை அதிகாரியும் பரஸ்பரம் தங்களுக்குள் பரிதாபமானதொரு பார்வையைப் பரிமாறிக் கொண்டார்கள்.

அகதி முகாமிலிருந்து வேலி பாய்ந்து கடந்துவிடுவது சுலபமென்றாலும், அவுஸ்திரேலியாவுக்குள் எந்த வீதியால் ஓடுவது என்ற தெளிவு இருக்க வேண்டும். இல்லாவிட்டால், அடுத்த சந்தியில் வைத்தே பொலிஸார் அமுக்கிவிடுவார்கள். ஏனெனில், மெல்போர்ன் அகதிகள் முகாமுக்கு மிக அருகிலேயே ஒரு பொலிஸ் நிலையமிருக்கிறது. தப்புவதற்கு முடிவெடுத்தவர்கள், வெளியில் நண்பர்களின் துணையோடு தப்பியோடினால், அவர்கள் காத்திருந்து கூட்டிக் கொண்டு ஓடுவார்கள். அப்படி ஓடுபவர்கள்கூட, அதிக காலம் ஒளிந்து வாழ்வது என்பது அவுஸ்திரேலியாவைப் பொறுத்தவரை கடினமானதுதான்.

ஐரோப்பிய நாடுகள் என்றால், ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்குக் கள்ளமாக நுழைந்து, ஆண்டுக்கணக்கில் அதிகாரத்தரப்பின் கண்களில் பட்டுவிடாமல், வாழ்க்கையை ஓட்டிக்கொள்ளலாம். அவுஸ்திரேலியாவில் என்னதான் செய்வது? சுற்றிவரக் கடல்.

இது புரியாமல், இடம் - வலம் தெரியாமல், மொக்குத்தனமாகத் தப்பியோடிய பல அகதிகள், இரண்டு மூன்று மணி நேரத்திலயே பொலிஸாரிடம் பிடிபட்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம், மெல்போர்ன் முகாமுக்கு மிக அருகிலேயே ரயில் நிலையமொன்று உள்ளது.

தப்பியோடுபவர்கள் அந்த ரயிலில் ஏறி எங்காவது ஓடலாம் என்று அங்கு காத்திருக்கும்போதே பொலிஸார் சென்று அமுக்கிவிடுவார்கள்.

ஆனால் இந்த தடவையும் பொலிஸார் சம்பிரதாயபூர்வமாக அகுனாவின் புகைப்படத்தோடு ரயில் நிலையத்துக்குத்தான் போவார்கள் என்று முகாம் அதிகாரிகள் தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள்.

அன்றைய தினம் எனக்கு வேலையிருக்கவில்லை என்ற காரணத்தால், இந்தச் சம்பவங்கள் அனைத்தையும் பின்னர்தான் அறிந்துகொண்டேன்.

அகுனா தப்பியோடி இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு, அகதிகள் தங்கள் தங்கள் அறைகளிலிருந்து வெளியில் வருவதற்கு அனுமதிக்கப்பட்டார்கள். தாங்கள் ராதாவையும் குழந்தையையும் வழியனுப்பிவைக்கும் நேரம் பார்த்து, அப்பாவிபோல முகாமில் திரிந்த ஒருத்தன், மொத்த அதிகாரிகளுக்கும் விபூதி அடித்துவிட்டானே என்ற ஆச்சர்யம் எல்லோரது முகத்திலும் தெரிந்தது.

அடுத்து என்ன? முகாம் அதிகாரிகள் அனைவரையும் குடிவரவுத்துறை அமைச்சு அதிகாரிகள் அழைத்துப்போய் அம்மிக்கல்லில் போட்டு இஞ்சிபோல இடித்துத் தள்ளப்போகிறார்கள் என்று அகதிகள் தங்களுக்குள் பேசிச் சிரித்தார்கள்.

அடுத்த தடவை அகதிகள் யாராவது விடுதலையாகும்போது, தாங்களும் அகுனாவின் ஸ்டைலைப் பின்பற்றினால் என்ன என்பது போல, சில அகதிப் பெடியன்கள் சார்ளி கம்பவுண்டின் கிழக்குப் பக்க வேலியைப் போய் கண்களால் அளந்துகொண்டு நின்றார்கள். தங்களுக்குள்ளிருந்து ஒரு புரட்சியாளன் வெற்றிகரமாகப் பாய்ந்து ஓடிய வேலித்தடங்களைப் பெருமையோடு பார்த்துக் கொண்டிருந்த அகதிகளை, அங்கு வந்த அதிகாரிகள் கலைத்தார்கள்.

'ம்' உங்கட வீரத்தை எங்களிடம் காட்டுங்கோ, அங்க ஒருத்தன் உங்கள் எல்லாருக்கும் வெச்சான் பாருங்க ஆப்பு. அப்ப எங்க போனது உங்கட வீரம்?"

அதிகாரிகளின் காதுபட அவர்களை அகதிகள் காறி உமிழ்ந்தார்கள். "உங்கட நாட்டுக்குள்ள கடலாலயும் கள்ளமாக வந்து, தரையாலயும் கள்ளமாக ஒருத்தன் ஓடீட்டான். உங்களுக்கெல்லாம் வெக்கமா இல்லையா?" பாதுகாப்பு அதிகாரியை ஈரான் கிழவி ஒருத்தி உடைந்த ஆங்கிலத்தில் நிறுத்திவைத்துக் கேட்டாள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா

## ஆகூதாவின் சபதம்




வார்த்தையை அளந்து பேசுவது போல் பேசினான் இளைய பல்லவன். "நீங்கள் தந்தையை விடப் புத்திசாலி என்பதுதான் காரணம்." என்றான் அவன்.

அவன் தன்னைப் பாராட்டுகிறானா அல்லது தன்னைப் பார்த்து நகைக்கிறானா என்பதை அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை. எதற்கும் கேட்டு வைத்தாள் அவள், "பாராட்டவா என்னை இங்கு அழைத்து வந்தீர்கள்" என்று.

"இல்லை. பாராட்ட அல்ல. உண்மையைச் சொல்ல. உங்கள் தந்தையின் நிதானம் தைரியம் எல்லாம் மேலுக்குத் தான். உண்மையான தைரியமும், நிதானமும், 'உள்ள ஆபத்தைப் புரிந்துகொள்ளும் சக்தியும் உங்களுக்குத்தான் இருக்கிறது. ஆகவே, உங்களிடம் விஷயத்தைச் சொல்லவே இங்கு அழைத்து வந்தேன்." என்றான் இளைய பல்லவன்.

"என்ன! எங்களுக்கு ஆபத்தா! வியப்புடன் கேட்டாள் மஞ்சளழகி.

"ஆம்...

"யாரிடமிருந்து ஆபத்து?"

"என்னிடமிருந்து.

"உங்களை என் தந்தை சிறை செய்துவிட்டால்? ஏன் கொன்றே விட்டால்?"

"சிறை செய்தாலே ஆபத்து. கொன்றுவிட்டால் ஆபத்து பன்மடங்கு அதிகம். இருப்பதைவிட இறந்தபின் நான் அபாய மனிதன்.

"இறந்தபின் நீங்கள் என்ன செய்ய முடியும்?"

இளையபல்லவன் விழிகள் அவளை நோக்கி நகைத்தன. "இந்த அக்ஷயமுனைக் கோட்டையை அழித்து விட முடியும். இங்குள்ள அனைவரையும் கொன்றுவிட முடியும். புல் பூண்டு கூட இல்லாமல் இந்த இடத்தைப் பொசுக்கிவிட முடியும்" என்ற இளைய பல்லவனின் குரலில் திடீரென மீண்டும் விபரீதத் தொனி தெரிந்தது.

"பிசாசாக வந்து இத்தனையையும் செய்வீர்களா?" என்று நகைக்க முற்பட்ட மஞ்சளழகி, இளைய பல்லவனின் கண்களில் திடீரென்று பளிச்சிட்ட ஒரு பார்வையைக் கண்டு தன்னைச் சட்டென்று அடக்கிக் கொண்டாள். நகைப்பு உதடுகளில் உறைந்தது. முகத்தில் கிலி படர்ந்தது. அந்தக் கிலியை இளையபல்லவனின் அடுத்த சொற்கள் உச்சஸ்தாயிக்குக் கொண்டு போயின.

எங்கிருந்தோ, வெளி உலகத்தில் இருந்து பேசுவது போல் ரகசியமும் ஆழமும் பயங்கரமும் தொனித்த குரலில் பேசினான் இளைய பல்லவன், "ஆம். மஞ்சளழகி." என்று அவன் ஆரம்பித்ததும், ஏதோ சொல்ல முற்பட்ட அந்தப் பெண்ணை, "தடுக்காதீர்கள். உங்கள் தங்கநிற எழில் என்னை பிரமிக்க வைத்திருக்கிறது. உங்களை இனி நான் மஞ்சளழகி என்றுதான் அழைப்பேன்.

ஆனால் இத்தனை பிரமிக்கத் தக்க அழகு என் அழிவினால் சீரழிந்துவிடுமே என்ற ஏக்கமே என்னை ஆட்கொண்டிருக்கிறது. தற்சமயம்," என்ற இளையபல்லவன் மேலும் அதே விபரீதத் தொனியில் பேசினான் "ஆம், மஞ்சளழகி, உங்கள் அழகு குலைந்துவிடும். அது மட்டுமல்ல, உங்களைப்போல் இந்தக் கோட்டையிலுள்ள பல பெண்கள் சீரழிக்கப்படுவார்கள்.

இங்குள்ள கொள்ளைக்காரர்களும், அதோ இன்று நவரத்தினங்கள் இழைத்த ஆசனத்தில் உட்கார்ந்திருக்கும் உங்கள் தந்தையும் கொசுக்களைப்போல் நசுக்கப்படுவார்கள். இந்தக் கோட்டையும் கொத்தளங்களும் கொளுத்தப்படும். இத்தனையும் என் ஒருவன் மரணத்தால் ஏற்படும். என் மரணம் இந்த நகரத்தையே மாய்த்துவிடும். சந்தேகம் வேண்டாம்.

பிசாசாக வந்து இத்தனையும் சாதிப்பேனா என்றல்லவா கேட்டீர்கள்? ஆம், பிசாசாக வருவேன். நாசம் செய்ய அல்ல. நாசத்தை வேடிக்கை பார்க்க. ஆனால் இதை நாசம் செய்ய வருவது என்னை விடப் பெரும் பிசாசு. உயிருள்ள ஒரு பிசாசு வரும் இங்கே. அது வருவதற்கு ஏற்பாடு செய்துவிட்டுத்தான் வந்திருக்கிறேன். என் முன்னேற்பாட்டைப் பற்றி என்ன நினைக்கறீர்கள்?" என்று பேசிக்கொண்டு போன இளைய பல்லவன் சிறிது பேச்சை நிறுத்தி, மஞ்சளழகியைக் கூர்ந்து நோக்கினான்.

அவள் பிரமை பிடித்து ஏதும் புரியாமல் குழம்பி நின்றிருந்தாள். இவன் வீண் பெருமையடித்துக் கொள்ளும் கையாலாகாதவனா? செய்கையால் முடியாததைச் சொற்களைக் கொண்டு சரிக்கட்டி நம்மை அச்சுறுத்தப் பார்க்கிறானா என்ற சந்தேகம் அவள் சித்தத்தில் ஒரு விநாடிதான் எழுந்தது. அடுத்த விநாடி அந்தச் சந்தேகம் மறைந்தது.

மறையவைத்தது இளைய பல்லவனின் குரூரப் பார்வையொன்று. அவன் இதழ்களில் அந்தத் தருணத்தில் தவழ்ந்த இளநகையிலும், உதடுகள் உதிர்த்த சொற்களிலும் அந்தக் குரூரம் இருந்தது. இளநகையைத் தொடர்ந்து அவன் உதடுகளைத் திறந்து சொன்னான், "மஞ்சளழகி! நான் சொன்னவை வீண் வார்த்தைகளல்ல. நான் செய்துள்ள முன்னேற்பாடும் பொய்யல்ல. இத்தனை நேரம் நான் குறிப்பிட்ட நாசம் நடந்தே தீரும். ஏன் தெரியுமா?" என்று.

"ஏன்?" தீனமாக எழுந்தது மஞ்சளழகியின் கேள்வி.

"வரப்போவது யார் தெரியுமா?"

"தெரியும்.

பிசாசு.

"பிசாசல்ல.

"ஹம்!"

"பிசாசை விடக் கொடியது!"

"பிசாசை விடக் கொடியதா ?"

"ஆம். அகூதா!"

எத்தனை பெரிய வெடியை அவன் எடுத்து வீசியிருந்தாலும், அதே விநாடியில் அந்த அறையில் ஆயிரம் பிசாசுகள் தாண்டவமாடியிருந்தாலும் அளிக்க முடியாத அதிர்ச்சியை இளையபல்லவன் பதில் அளித்தது அவளுக்கு. அவள் ஏதோ பேச வாய் திறந்தாள். வாயைத் துறந்தாளே தவிர சொற்கள் வெளிவரவில்லை. வாய் அடைத்து நின்றுவிட்டது.

அவள் உணர்ச்சி வெள்ளத்தையும் உள்ளத்தே துளிர்த்து கிளைத்துவிட்ட கிலியையும் இன்னும் அதிகமாக வளர்த்தன இளைய பல்லவனின் அடுத்த சொற்கள். "மஞ்சளழகி! இந்தக் கோட்டைக்கு வருவதை அகூதாவே தடுத்தார். நான்தான் கேட்கவில்லை. கலிங்கத்திலிருந்து கடாரம் செல்லும் மரக்கலங்கள் இடையே புகுந்து தடுக்க இதைவிட நல்ல இடமில்லையென்ற காரணத்தால் நான் இந்த இடத்துக்கு வருவதாகத் திட்டமிட்டேன்.

பிடிவாதமும் பிடித்தேன். அதற்கு மேல் அகூதா ஏதும் பேசவில்லை. 'என்ன உதவி உங்களுக்குத் தேவை?" என்று மட்டும் கேட்டார். எனக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால், இக்கோட்டையின் மீது பழி வாங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டேன். அகூதாவின் கண்களில் புதிய ஒளி ஒன்று பிறந்தது.

அப்பொழுது நாங்கள் இருவரும் நடுக் கடலில் அவருடைய மரக்கலத்தின் தளத்தில் நின்று கொண்டிருந்ததோம். வானமும் மேகமூட்டத்தால் கறுத்துக் கிடந்தது. ஒரு கையை முஷ்டியாகப் பிடித்து உயரத் தூக்கி வானத்தை நோக்கிச் சபதம் செய்தார் அகூதா, "இன்னும் மூன்று வார காலத்தில் நான் அக்ஷயமுனை வருகிறேன் உங்களைச் சந்திக்க.

நீங்கள் அங்கு இருந்தால் அக்ஷயமுனை பிழைக்கும். இல்லையேல் அக்ஷயமுனை இல்லை. தரையோடு தரையாக்கி விடுகிறேன் அந்தக் கோட்டையை. ஆடவர், பெண்டிர் அனைவரையும் என் வீரர்களிடம் ஒப்படைத்து விடுகிறேன் என்று கூறிப் பேய்ச் சிரிப்பு சிரித்தார் அவர். எதற்கும் அஞ்சாத எனக்கே அந்தச் சிரிப்பு அச்சம் தந்தது.

இன்று நினைத்தாலும் என் உள்ளம் நடுங்குகிறது. ஆகவே தேவி! திட்டமாய்த் தெரிந்து கொள்ளுங்கள். என் உடலில் ஊசி முனையளவு தொடப்பட்டாலும் இன்னும் இரண்டே வாரங்களில் அக்ஷயமுனை அழிந்துவிடும். நான் அகூதாவை விட்டுக் கிளம்பி ஒரு வாரம் ஆகிறது" என்றான் இளையபல்லவன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைவிமர்சனம்






நாயகன் விஜய் சேதுபதி பிறந்ததிலிருந்து துரதிஷ்டசாலியாக இருக்கிறார். இவர் வாழ்க்கையில் எல்லாம் நேருக்கு மாறாக நடக்கிறது. இவர் பகலில் கார் டிரைவராகவும் இரவில் பவுன்சராகவும் வேலை பார்த்து வருகிறார்.

டிரைவராக வேலை செய்யும்போது நயன்தாராவையும், பவுன்சர் வேலை செய்யும்போது சமந்தாவையும் காதலிக்கிறார். ஒரு கட்டத்தில் இந்தக் காதல் பிரச்சனையாக மாறுகிறது. இறுதியில் விஜய் சேதுபதி காதல் பிரச்சனையை எப்படி சமாளித்தார்? நயன்தாரா, சமந்தா இருவரில் யாருடன் காதலில் ஒன்று சேர்ந்தார்? என்பதே படத்தின் மீதிக் கதை.

நாயகன் விஜய் சேதுபதி, ராம்போ கதாபாத்திரத்தில் நடித்து ரசிகர்களை கவர்ந்து இருக்கிறார். சின்ன சின்ன அசைவுகள் மற்றும் முக பாவனைகளில் கூட அதிக ஸ்கோர் செய்திருக்கிறார். குடும்பப் பெண்ணாக ஆர்ப்பாட்டம் இல்லாத நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார் நயன்தாரா.

மாடர்ன் பெண்ணாக நடித்து அசத்தி இருக்கிறார் சமந்தா. விஜய் சேதுபதி, நயன்தாரா, சமந்தா காமினேஷன் சீன்களில் மூன்று பேருமே போட்டி போட்டு நடித்து இருக்கிறார்கள். மாறன், கிங்ஸ்லி ஆகியோர் காமெடியில் கலக்கி இருக்கிறார்கள்.

இரண்டு காதலை மையமாக வைத்து படத்தை இயக்கியிருக்கிறார் இயக்குனர் விக்னேஷ் சிவன். கதாபாத்திரங்களிடையே திறமையாக வேலை வாங்கி இருக்கிறார்.

இரண்டு காதல் வைத்து பார்ப்பவர்களை நெருடல் இல்லாமல் ரசிக்க வைத்திருக்கிறார் விக்னேஷ் சிவன். காமெடி காட்சிகள் ஆங்காங்கே கைகொடுத்து இருக்கிறது.

படத்திற்கு பெரிய பலம் அனிருத்தின் இசை. பின்னணி இசையில் மாஸ் காண்பித்து இருக்கிறார். பாடல்கள் அனைத்தும் சூப்பர். ஸ்ரீதரின் ஒளிப்பதிவோடு பார்க்கும்போது கண்களுக்கு விருந்து படைத்து இருக்கிறது.

## சர்தார் படம் மூலம் 16 வருடங்களுக்கு பிறகு லைலா ரீ என்ட்ரி ?



தமிழ் சினிமாவில் 2000 இன் தொடக்கத்தில் உள்ளே நுழைந்து விஜய், அஜித், விக்ரம், சூர்யா என முன்னணி நடிகர்கள் பலருக்கும் ஜோடியாக நடித்தவர் நடிகை லைலா. கன்னக்குழி அழகி என ரசிகர் களால் பாராட்டு பெற்ற லைலா தனது க்யூட்டான எக்ஸ்பிரஸன்களால் ரசிகர்களை கவர்ந்தவர். நந்தா, பிதாமகன் உள்ளிட்ட படங்களில் தனது நடிப்பாலும் ஆச்சரி யப்பட வைத்தார்.

கடந்த 2006 இல் அஜித்துடன் பரமசிவன் படத்தில் கதாநாயகியாக நடித்த அவர், அஜித் நடித்த திருப்பதி படத்தில் ஒரே ஒரு பாடலுக்கு ஆடியதுடன் சினிமாவுக்கு குட்பை சொல்லிவிட்டு, திருமணம் செய்து கொண்டு குடும்ப வாழ்க்கையில் செட்டிலானார்.

இந்தநிலையில் 16 வருடங்கள் கழித்து அவர் பி.எஸ்.மித்ரன் இயக்கத்தில் கார்த்தி நடித்து வரும் சர்தார் படத்தின் மூலம் மீண்டும் திரையுலகில் அடியெடுத்து வைத்துள்ளார் என்றே தெரிகிறது. தனது சோசியல் மீடியா பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள ஒரு பதிவின் மூலம் இந்த தகவலை சூசகமாக அவர் உணர்த்தியுள்ளார்.

ஏற்கனவே இந்தப் படத்தில் ராஷி கண்ணா, ரஜிஷா விஜயன் என இரண்டு கதாநாயகிகள் மற்றும் முக்கிய வேடத்தில் சிம்ரன் ஆகியோர் நடித்து வரும் நிலையில் லைலாவும் இதில் நடிப்பது ஆச்சரியமான விடயம் தான். இதற்கு முன்னதாக பார்த்தேன் ரசித்தேன் படத்தில் சிம்ரனும் லைலாவும் இணைந்து நடித்து இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## ரசிகர்களை கவரும் 'பிசாசு 2' படத்தின் டீசர்

மிஷ்கின் இயக்கத்தில் உருவாகி உள்ள 'பிசாசு 2' படத்தின் டீசர் வெளியாகி ரசிகர்களை கவர்ந்து வருகிறது. மிஷ்கின் இயக்கத்தில் கடந்த 2014 ஆம் ஆண்டு வெளிவந்து வெற்றிகரமாக ஓடிய பேய் படம், 'பிசாசு.'

அந்த படத்துக்கு கிடைத்த வரவேற்பை தொடர்ந்து, 'பிசாசு' படத்தின் இரண்டாம் பாகம் தற்போது தயாராகி உள்ளது. இந்தப் படத்தையும் மிஷ்கினே இயக்கி உள்ளார். நடிகை ஆண்ட்ரியா முதன்மை கதா பாத்திரத்தில் நடித்துள்ள இப்படத்தில், நடிகர் விஜய் சேதுபதி, கௌரவ வேடத்தில் நடித்துள்ளார்.

ராக்ஃபோர்ட் எண்டர்டெயின்மெண்ட் சார்பில் முருகானந்தம் தயாரிக்கும் இப்படத்திற்கு கார்த்திக் ராஜா இசையமைத்துள்ளார். சில மாதங்களுக்கு முன்பு வெளியான இப்படத்தின் பாடல் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. இந்நிலையில் "பிசாசு 2" படத்தின் டீசரை படக்குழு வெளியிட்டுள்ளது. ரசிகர்கள் பெரும் எதிர்பார்த்திருந்த இப்படத்தின் டீசர் ரசிகர்களை கவர்ந்து வைரலாகி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

| | | |
|---|---|---|
| படம் | : | கவரிமான் |
| இயற்றியவர் | : | பஞ்சு அருணாச்சலம் |
| இசை | : | இளையராஜா |
| பாடியவர்கள் | : | எஸ்.பி.பாலசுப்ரமணியம் |



பூ போலே உன் புன்னகையில்
பொன் உலகினை கண்டேனம்மா

பூ போலே உன் புன்னகையில்
பொன் உலகினை கண்டேனம்மா
என் கண்ணே கண்ணின் மணியே
என் உயிரே உயிரின் ஒளி நீயே

பூ போலே உன் புன்னகையில்
பொன் உலகினை கண்டேனம்மா

பூங்காற்றிலே சிறு பூங்கொடி போல்
நீ நடப்பது நாட்டியமே

மூங்கிலிலே வரும் சங்கீதம் போல்
நீ சிரிப்பது காவியமே
அன்புக்கு நூறு ஆசைக்கு நூறு
முத்துக்கள் சூட்டி நான் காணுவேன்
வா மகளே எனை பார் மகளே
என் உயிரின் ஒளி நீயே

பூ போலே உன் புன்னகையில்
பொன் உலகினை கண்டேனம்மா

என் கண்ணே கண்ணின் மணியே
என் உயிரே உயிரின் ஒளி நீயே

பூ போலே உன் புன்னகையில்
பொன் உலகினை கண்டேனம்மா

அம்மாவென்று வரும் கன்றுக்குட்டி
அது தாய்மையை கொண்டாடுது

குக்கூவென்று வரும் சின்னக் குயில்
தன் குழந்தைக்கு சோறூட்டுது
நெஞ்சோடு பாசம் வந்தாடும் போது
கண்ணோடு நேசம் ஆறாகுமே
நீ இன்றி என்றும் நான் இல்லையே
என் உயிரின் ஒளி நீயே

பூ போலே உன் புன்னகையில்
பொன் உலகினை கண்டேனம்மா
என் கண்ணே கண்ணின் மணியே
என் உயிரே உயிரின் ஒளி நீயே

பூ போலே உன் புன்னகையில்
பொன் உலகினை கண்டேனம்மா

# மன அழுத்தம் இல்லாமல் வேலையில் முன்னேற்றம் காணும் வழிகள்

நம்முடைய மூளையானது ஒரு விஷயம் குறித்து நாம் லேசர் ஃபோகஸ்டன் (முழு கவனத்தையும் ஒன்று குவித்து யோசிப்பது) செயற்படும் நேரத்தில் கொண்டிருக்கும் புரடக்டிவிட்டி சார்ந்த செயற்திறனைவிட மிகவும் ரிலாக்ஸ்டாக இருக்கும் நேரத்திலேயே அதிக செயற்திறனுடன் செயற்படுகிறது. அதாவது, ஒரு பிரச்சினையைத் தீர்க்க லேசர் ஃபோகஸ்டன் நாம் சிந்திக்கும்போது கிடைக்கும் விடைகளைவிட ரிலாக்ஸ்ட்டாக பிரச்சினையை மறந்திருக்கும் போதே சரியான விடையைத் (சொல்யூஷன்) தருகிறது என்கின்றன ஆய்வு முடிவுகள்.


புரடக்டிவிட்டி குறித்து நமக்கு சொல்லப்படும் அறிவுரைகள் எல்லாம் இந்த ஆய்வு முடிவுகளுக்கு முற்றிலும் எதிரானவையாகவே இருக்கின்றன. உற்பத்தித்திறனைப் பெருக்க கவனத்தைக் குவியுங்கள். வேறெந்த விஷயத்தையும் நினைக்காதீர்கள்' என்றெல்லாம் கவனக்குவியலின் அவசியத்தை மட்டுமே தற்போது கிடைக்கும் அறிவுரைகளும் பயிற்சிகளும் வலியுறுத்துகின்றன. இது எவ்வளவு தவறு என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். நிச்சயமாக, தலைசிறந்த விஷயங்கள் கவனக்குவியலின் மூலமாகச் செய்து முடிக்கப்படுவதில்லை. கவனக்குவியல் மற்றும் கவனச் சிதறல் (அலைபாயுதல்) என்ற இரண்டும் மாறிமாறி வரும் சூழலிலேயே தலைசிறந்த கிரியேட்டிவிட்டி மற்றும் பிரச்சி னைகளுக்கான தலைசிறந்த தீர்வுகள் போன்றவை உருவாகிறது கவனக்குவியலும் கவனச் சிதறலும்...

எடுத்த காரியம் குறித்து கவனம் செலுத்துவதில் நமக்கு ஒழுங்கு மற்றும் ஒழுங்கின்மை என்ற இரண்டும் மாறிமாறி வருவது சகஜமான ஒன்றாகும். சில சமயம், இந்த ஒழுங்கின்மை என்பது எடுத்த காரியத்தை விட்டுவிட்டு சற்றும் சம்பந்தமில்லாத விஷயம் குறித்துகூட சிந்திக்க ஆரம்பித்துவிடுவோம். இதனாலேயே புரடக்டிவிட்டி குறித்த ஆலோசகர்கள் 'தீவிர கவனம் தேவை, தீவிர கவனம் தேவை' என்ற மந்திரத்தைத் திரும்பத் திரும்பக் கூறுகின்றனர்.

இப்படிச் சொல்வதனாலேயே அலைபாயும் மனதை ஓரளவுக்காவது நிலைநிறுத்தி சிறிய அளவிலாவது எடுத்த காரியத்துக்கான தீர்வை நாம் காண முடியும். ஆனால், தலைசிறந்த தீர்வுகளைக் கண்டறியவும், அதிக அளவுக்கு கிரியேட்டிவிட்டியுடன் திகழவும் நாம் அனைவரும் பழக வேண்டியது கவனம் மற்றும் கவனச்சிதறல் என்ற இரண்டையும் கொண்டு பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் கண்டறிவதும் கிரியேட்டிவிட்டியை அதிகரித்துக் கொள்வதையும்தான். இன்னும் தெளிவாகச் சொன்னால், சாதாரண ரக புரடக்டிவிட்டிக்கு ஃபோகஸ்டனும் தலைசிறந்த சிறப்பான புரடக்டிவிட்டிக்கு ஃபோகஸ் இல்லாமல் ரிலாஸ்க்ஸாகவும் செயற்பட வேண்டும் என்கின்றன ஆய்வு முடிவுகள்.

இதில் நாம் அறியாத இன்னுமொரு விடயமும் இருக்கிறது. நாம் அனைவருமே கிரியேட்டிவிட்டியும் புரடக்டிவிட்டியும் வெவ்வேறு விடயம் என்று நினைத்துக்கொண்டும் புரிந்துகொண்டும் இருக்கிறோம். உண்மையில் இந்த இரண்டும் ஒன்றுக்கொன்று எதிர்த்திசையில் இருக்கும் விடயங்களாகும். இந்த இரண்டும் சேர்ந்தால் அற்புதங்கள் நிகழும் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். கிரியேட்டிவிட்டி என்ற மேஜிக் வற்புறுத்தலின்பேரில் நிகழாது. எனவேதான், கிரியேட்டிவிட்டி என்ற நிகழ்வு நிகழ மனம் அலைபாயவும், கவனம் எங்கோ செல்லவும் வேண்டும்.

இப்போது நீங்கள் செய்ய வேண்டியது என்ன என்கிற



கேள்விக்கு மூன்று விடயங்கள் அத்தியாவசியமானவை. முதலாவதாக, நீங்கள் வளர்ச்சி குறித்த வேட்கையைக் கொண்டவராக இருக்க வேண்டும். ஏனெனில், இந்தவித வேட்கை இல்லாத ஒரு நபராக நீங்கள் இருந்தீர்கள் எனில், கடினமான எந்த விடயத்தையும் நீங்கள் ஏறெடுத்தும் பார்க்க மாட்டீர்கள். இதனால் கிரியேட்டிவிட்டிக்கும் அதைச் சார்ந்த புரடக்டிவிட் டிக்கும் உங்களிடம் இடமே இருக்காது.

இரண்டாவதாக, நீங்கள் பணியிடத்தில் கிரியேட்டிவ்வாகத் திகழ முதலில் உங்களுடைய புரடக்டிவிட்டியை உபயோகித்து அதனால் உருவாகும் பலன்களை சரியாக அனுபவிக்கத் தெரிந்தவராக இருக்க வேண்டும். வெறுமனே கிரியேட்டிவ்வாக இருந்து கொண்டு அதனால் உருவாகும் பலன்களை நீங்கள் பெற்றுக் கொள்ள முடியாத சூழலில் இருந்தீர்கள் எனில், நீங்கள் கொஞ்சம் கொஞ்சமாக உங்களிடம் இருக்கும் கிரியேட்டிவிட்டியை நீங்களாகவே மழுங்கடித்துக் கொள்வீர்கள்.

மூன்றாவதாக, நீங்கள் மிகவும் அதிக அளவிலான செயற்பாட்டு ஒழுக்கங்களைக் (organized) கொண்டிருந்தும், புரடக்டிவிட்டிக்கான நடைமுறைகளை உருவாக்கத் தெரிந்து கொண்டும் இருந்தாலுமே ஒரு சிறு குறுகிய வட்டத்தில் சிக்கிக் கொண்டீர்கள் என்றால் உங்களால் பெரிய அளவில் கிரியேட்டிவ்வாகவும் புரடக்டிவ்வாகவும் இருக்க முடியாது.

மேலும், நேர மேலாண்மையை நீங்கள் கறாராகப் பின்பற்றத் தொடங்கினால், நீங்கள் எல்லா விடயங்களையும் பிசினஸ் லைக்காக அணுகி, செயற்பட ஆரம்பிப்பீர்கள். மொத்த பிசினஸ் உலகின் செயற்பாடுகளுமே மனிதர்களால் நிறைந்தது தானே? இதில் ஒருவர் நம்மிடம் அதிக நேரத்தை எதிர்பார்க்கலாம். ஒரு சிலருக்கு பிசினஸ் லைக்காக நேரம் ஒதுக்கி பிசினஸ் மட்டும் பேசி கைகுலுக்கி விடைபெறுவது பிடிக்காமல் போகலாம். இதனால் பலரும் நம் நடவடிக்கையைக் கண்டு எரிச்சலடையவே வாய்ப்புள்ளது. அதனால் அவர் நமக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய விடயங்களைக்கூட செய்யாமல் போகவோ, அனுகூலமான விடயங்களை வரவிடாமல் செய்யவோ வாய்ப்பிருக்கிறது இல்லையா? நம்மை நாமே கண்காணித்துக் கொள்வது எப்படி?

"புரடக்டிவிட்டி பற்றிக் கற்றுக் கொள்வதற்கு முன் ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். இது குறித்து அதிகமாகத் தெரிந்துகொள்ள ஆரம்பிக்கும் போது, நாம் தற்போது இருக்கும் நிலையை நினைத்து, "சே, நாம் ரொம்பத்தான் மோசமாக இருந்திருக்கிறோமே!" என்று வெட்கம் கொள்ள வாய்ப்புள்ளது. இது உங்கள் வேலைத் திறனை மேலும் பாதித்து விடும் என்பதால், இதில் நீங்கள் மிகவும் கவனத்துடன் இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் சில அதிசயங்கள்...


பனாவே நெற்கூரைகள்

### பேகன் ஆலயம்

இன்றைக்கு மியான்மர் என்றழைக்கப்படும் பர்மாவில் மாண்ட்லே பிரதேசத்தில் அமைந்துள்ள மிகப்பழமையான நகரம் பேகன். 9 ஆவது நூற்றாண்டு முதல் 13 ஆம் நூற்றாண்டு வரை அந்தப் பகுதியை ஆண்டு வந்த பேகன் மன்னர்கள் உருவாக்கிய நகரம் பேகன். நகரைச்சுற்றி மரங்கள் அடர்ந்த கட்டடங்கள், 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறிய ஆலயங்கள், ஆயிரத்திற்கும் மேற்பட்ட நினைவுத் தூண்கள், புத்த விஹாரர்கள் என்று பார்த்து பார்த்து செதுக்கியிருந்தார்கள் பேகன் மன்னர்கள்.

### பனாவே நெற்கூரைகள்

பிலிப்பைன்ஸ் நாட்டில் புகாவ் என்ற இடத்தில் உள்ள மலைப் பிரதேசத்தில் உருவாக்கப்பட்ட நெல் சாகுபடி இடங்கள், கடல் மட்டத்திலிருந்து சுமார் 5 ஆயிரம் அடிக்கு மேல் 10 ஆயிரத்து 360 கிலோ மீற்றர் பரப்பளவில் அமைந்துள்ளன. இந்த நெற்கூரைகளை வானத்திலிருந்து பார்த்தால் பசுமை எழுதிய கவிதை வரிகளைப் போல் இருக்கும். பிலிப்பைன்ஸ் மக்கள் உலகின் எட்டாவது அதிசயம் என்றே இதனை அழைக்கின்றனர்.

### பொட்டாலா அரண்மனை

திபெத் தன்னாட்சி நிர்வாகப் பகுதியில் லாஷா என்ற இடத்தில் அமைந்துள்ள அரண்மனை, பொட்டாலா என்றழைக்கப்படுகிறது. திபெத்தின் மதம் மற்றும் நிர்வாகத்தலைவர் தலாய் லாமா வசித்த நகரம் இதுவாகும். 13 ஆவது தலாய்லாமா வரை இந்த அரண்மனையில் தங்கியுள்ளனர். 14 ஆவது தலாய் லாமா அங்கிருந்து தப்பி இந்தியாவுக்கு வந்து தர்மசாலாவில் தங்கியுள்ளார். 1645 இல் 5 ஆவது தலாய்லாமா காலத்தில் கட்டப்பட்ட இந்த அரண்மனை 400 மீற்றர் கிழக்கு மேற்காகவும் 350 மீற்றர் தெற்கு வடக்காகவும் அமைந்துள்ளது.

### டெரகோட்டா வீரர்கள்

சீனாவை கி.மு மூன்றாம் நூற்றாண்டில் ஆண்ட சின் அரசனின் கல்லறையைச்சுற்றிலும் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மண் சிற்பங்கள் (டெர கோட்டா) குதிரை வீரர்கள் வடிவத்தில் வைக்கப்பட்டிருந்தன. 1974 ஆம் ஆண்டு கிணறு வெட்டுவதற்காக பள்ளம் தோண்டப்பட்டபோது இவை கண்டுபிடிக்கப்பட்டன. சின் வம்சத்தைச் சார்ந்த சின் சி ஹூவாங்க் தான் சீனாவை ஒன்றுபடுத்தியவர். தான் இறந்த பிறகு தனது கல்லறையைச்சுற்றிலும் குதிரை வீரர்களின் உருவங்களை காவலுக்காக நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தார்.

அவர் விருப்பப்படி குதிரை வீரர்கள் மட்டுமல்ல மரத்தேர்களும் செய்து உடன் புதைக்கப்பட்டன. 2200 வருடங்கள் தாண்டியும் உருக்குலையாமல் அவை கிடைத்தது உண்மையில் அதிசயம் தான்.

### போரொபுடூர் புத்த ஆலயம்

இந்தோனேஷியாவில் உள்ள மத்திய ஜாவா பகுதியில் இருக்கும் மிகப்பெரிய மகாயாண புத்த ஆலயம் கிட்டத்தட்ட 504 வெவ்வேறு வடிவிலான புத்தர் சிலைகளை உள்ளடக்கியது.

மிக உயரமான ஸ்தூபிகள், பிரம்மாண்டமான மணி வடிவிலான தூண்கள் நிரம்பிய ஆலயம் அது. 9 ஆம் நூற்றாண்டில் சைலேந்திர வம்ச ஆட்சி காலத்தில் கட்டப்பட்ட இந்த ஆலயம் இந்தியாவின் குப்த பேரரசின் கட்டட மற்றும் சிற்பக்கலை பாணியின் தாக்கத்தில் உருவாக்கப்பட்டது.

(தொடரும்.)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2606

Search for people, places and things

**தரன்**

கொஞ்ச நாளா லைன்ல நின்னு பெற்றோல் அடிச்சு பழகீற்று




இப்ப முன்னுக்கு யாருமே இல்ல என்றால் பெற்றோல் அடிக்க மனமில்லாம கிடக்கு

**சுரேன்**

“நடித்து” வாழ்வது நரகத்து வாழ்க்கை...!



“பிடித்து” வாழ்வது கிராமத்து வாழ்க்கை

**மஞ்சுளா**

டாக்டர்: என்னயா என்ன நடந்திச்சு



கரன்ட் விலை கூடுதுனு சொன்னாங்க அதான் பதுக்கலாம்னு Try பன்னன்

**கமலா**

ஒரு லீட்டர் அடிச்சி Bike ல போறத்த



காப்போத்தல் அடிச்சிட்டு நடந்து போறது லாபம்டா டேய்

**தினேஸ்**



நிம்மதி மகிழ்ச்சி சந்தோஷம் உறவு நட்பு இதெல்லாம் இப்படித்தான்ங்க அப்பப்ப நழுவி நழுவி போகும் நாமதான் இழுத்து இழுத்து பிடிச்சுக்கனும்.

**பிருத்திகா**

டீச்சர் போர்ட்ல எழுதி போடுறத பார்த்து எழுதும் மொமெண்ட்




டீச்சர் போர்ட் தெரில கொஞ்சம் நகருங்க

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

288

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## உங்களுக்கான பதில்கள்

**cholesterol அதிகமாக உள்ளதால் பசுப்பால் குடிக்க பயமாயுள்ளது. பருகலாமா?**

பசுப்பால் ஊட்டச்சத்துள்ள உணவாகும். எல்லா வகையான போசனையையும் உள்ளடக்கியுள்ளது. ரின், பைக்கற்றில் அடைக்கப்பட்டு இரசாயனப் பொருட்கள் சேர்ந்த மாவகைகளிலும் பார்க்க பால் இயற்கையான பாதுகாப்பான ஒரு பானமாகும். எமது உணவின் கலோரிப் பெறுமான அடிப்படையில் 30% கொழுப்பு உணவாக இருக்க வேண்டும். மற்றைய கொழுப்பு உணவு வகைகளை தவிர்த்து பால் குடிப்பதன் மூலம் உடலில் சேரும் கொழுப்பு அதிக பாதிப்பை ஏற்படுத்தாது. உதாரணம் 100ml பாலில் 4.1g கொழுப்பு இருக்கின்றது. 100g தேங்காய்ப்பூவில் 28.2g கொழுப்பு இருக்கின்றது. 100g தேங்காய்ப்பூவை தவிர்த்தால் 700ml பாலை எவ்வித பயமுமின்றி குடிக்கலாம். வீட்டில் உள்ள இயற்கையான பசுப்பாலை குறைந்த விலையில் விற்று விட்டு non fat பாலை கூடிய விலை கொடுத்து வாங்குவது புத்திசாலித்தனமானதாகாது. எனவே உங்கள் உணவில் மற்றைய கொழுப்பை குறைத்து பசுப்பாலை பாதுகாப்பாக சேர்க்கலாம்.

**அடிக்கடி தடிமனால் பாதிக்கப்படுகிறேன். தும்மல், மூக்கிலிருந்து நீர் வடிதல் என்பவற்றால் அவஸ்தைப்படுகிறேன். அன்ரிபயோட்டிக் பாவித்தும் குணமடைவதில்லை. இதை எவ்வாறு தடுக்கலாம்?**

இந்த அறிகுறிகளுக்கு ஒவ்வாமையால் சுவாசப் பாதையில் ஏற்படும் அழற்சியே காரணமாகும். இதை ஆங்கிலத்தில் Allergic Rhinitis என்பர். இது கிருமித் தொற்றினால் ஏற்படும் நோய் அல்ல. கிருமித் தொற்றினால் ஏற்படும் நோய்களுக்கே அன்ரிபயோட்டிக் ( Antibiotics) தேவைப்படும். தூசு மற்றும் காற்றில் கலந்துள்ள மகரந்த மணி என்பன சுவாசப்பாதையைத் தூண்டி சில இரசாயனப் பதார்த்தங்களை உற்பத்தி செய்வதால் Allergic Rhinitis ஏற்படுகின்றது. இதனால் அரிப்பு, வீக்கம், மூக்கிலிருந்து நீர் வடிதல், கண்கள் வீங்கி சிவத்தல், மூக்கடைப்பு என்பன ஏற்படுகின்றன. குறித்த ஒரு நபருக்கு சில பொருட்கள் ஒவ்வாமையை ஏற்படுத்தும். அவற்றைக் கண்டறிந்து தவிர்ப்பதே இந்த நிலை ஏற்படுவதை தவிர்க்கும் வழியாகும். சிலருக்கு கால நிலை மாறுபாட்டின் போதும் இவ்வாறு ஏற்படலாம். இதனைத் தவிர்க்க முடியாதவர்கள் மருந்துகளைக் குளிகைகளாகவோ அல்லது நாசியினுள் விசிறியோ (Nasal spray) உள்ளெடுக்கலாம். உதாரணமாக Diphe nhydramine, Cetriazine மற்றும் Loratidine என்பனவாகும். இதில் முதலில் கூறியது நித்திரையைக் கூட்டும் என்பதால் பின்னைய இரு மருந்துகளைப் பகல் வேளையில் பாவிக்க முடியும். அவ்வாறு பாவிக்க வேண்டியவர்கள் மருத்துவ ஆலோசனையின் பின்னரே எடுக்க வேண்டும்.

**எனக்கு வயது 28 எனது இரண்டு விதைகளும் விதைப் பையினுள் இருக்கின்றது. ஆனால் ஒன்று உயரமானதாகவும் மற்றையது பதிவாகவும் உள்ளது. இது ஒரு நோயா? இதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்?**

உயர வித்தியாசம் என்பது இயற்கையானது. இது நோயின் அறிகுறி அல்ல. உங்களுடைய விதைப்பையில் ஒரு விதை மாத்திரமே இருந்து மற்றையதை அடையாளப்படுத்த முடியாமல் இருந்தால் உடனடியாக நீங்கள் மருத்துவ ஆலோசனையைப் பெற வேண்டும். விதையானது விதைப்பையினுள் இறங்காது வயிற்றினுள்ளேயே காணப்படின் பல பிரச்சினைகள் ஏற்படும். ஆனால் உங்கள் விதையானது விதைப் பையினுள் இறங்கியிருப்பதால் இது பற்றிக் கவலை கொள்ளத் தேவையில்லை.

**எனது நிறை அதிகம் என்று மருத்துவர்கள் சொல்கிறார்கள். உணவைக் குறைத்து சாப்பிடாமல் இருந்தால் தலை சுற்றுகிறது. உணவைக் கடுமையாகக் குறைத்தால் உடல் பலவீனப்பட்டு விடும் என்று பயமாக இருக்கிறது. உடற்களைப்பை போக்குவதற்கு எந்த வகையான சத்துமா வகைகளைச் சாப்பிடலாம். உப்புச் சோடா குடித்தால் நிறை அதிகரிக்குமா? அதிகரித்த நிறையுடன் பலர் நீண்ட காலம் வாழ்கிறார்களே? உடல் மெலிந்து விட்டால் நோய்க் கிருமிகள் தாக்கும் ஆபத்து ஏற்படாதா?**

உங்கள் களைப்புக்கு முக்கிய காரணியாக இருப்பது உங்களது அதிகரித்த உடல் நிறையே. உங்கள் அதிகரித்த உடல் நிறையைச் சமாளிக்கும் வல்லமை உங்கள் உடல் உறுப்புகளுக்குப் போதாமல் இருக்கும் பொழுது களைப்பு ஏற்படுகிறது. உங்கள் களைப்புக்கு வேறு ஏதாவது காரணிகளும் இருக்கிறதா? என்று உங்கள் மருத்துவர் உங்களைச் சோதித்துப் பார்த்திருப்பார். உணவைக் கடுமையாகக் குறைத்து பட்டினி கிடந்து தான் உடல் நிறையைக் குறைக்க வேண்டும் என்பது அவசியமில்லை. அவ்வாறு செய்தால் உங்களுக்கு மட்டுமல்ல யாருக்கும் தலைச்சுற்றும் களைப்பும் ஏற்படுவதுடன் உடலும் பலவீனமாகும்.

உடல் நிறையைக் குறைப்பதற்குச் சாப்பாட்டு வகையிலேயே மாற்றம் செய்ய வேண்டும் என்பதே முக்கியமானதாகும். நீங்கள் நிறையைக் குறைப்பதற்கு மாப்பொருள் அதிகமுள்ள உணவுகளைத் தவிர்த்து நல்ல ஊட்டச்சத்துள்ள, புரதம் நிறைந்த, கனியுப்புகள் நிறைந்த, விற்றமின்கள் நிறைந்த உணவுகளைப் போதியளவில் உண்ண முடியும்.

நீங்கள் போதியளவில் உண்ணக் கூடிய உணவுகளாவன; பால், மரக்கறி வகைகள், கௌப்பி, முட்டை, மீன், இறால், பயறு, பருப்பு வகைகள், பழ வகைகள், கோழி இறைச்சி, சுறா,சோயா, அவரை, இலை வகைகள், கொண்டல் கடலை போன்றவையாகும். இவற்றைப் போதியளவில் உண்டு நிறை குறைந்து வரும் போது உங்கள் உடல் பலவீனப்படமாட்டாது. நோய்க் கிருமிகள் தாக்கும் ஆபத்தும் ஏற்படாது.

மேலதிக சத்துமாக்களும் தேவைப்படாது. சோடா வகைகள் உடலுக்குப் பாதுகாப்பானது அல்ல. அவற்றைத் தவிர்ப்பது நல்லது. அதிகரித்த நிறையுள்ளவர்கள் அது எந்தக் காரணத்திற்காகவும் ஏற் பட்டிருந்தாலும் பரம்பரை காரணமாக ஏற்பட்டிருந்தாலும் கூட நிறையைக் குறைத்துக் கொள்வது மிகவும் அவசியமாகும். நிறையைக் குறைத்துக் கொள்வ தன் மூலம் வாழ்நாளை அதிகரித் துக் கொள்ளலாம் என்று ஆராய்ச் சிகள் சொல்கின்றன. நிறையைக் குறைப்பது கடினமல்ல முயற்சி எடுங்கள்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org